
# மள்ளர் மலர்

ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் ❁ மலர் 12 ❁ இதழ் 6 ❁ ஜூன் 2006

## ஸ்ரீ கரிவர மல்லன்



**மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம்**

**மேல உரப்பனூர் ஏரிக்கரையில் உள்ள கல்தூணில் உள்ள**

**கி.பி. 10 - ஆம் நூற்றாண்டு கல்வெட்டு**

செய்தி உள்ளே . . .

# ஜூன் 2006 – மள்ளர் மலர் – பொருளடக்கம்

பக்கம்


- **ஊடகங்களில் செய்தியை முடிவு செய்யும் செய்தியாளர்கள், 315 பெரிய செய்தியாளர்களில் ஒருவர் கூட பட்டியல் சாதியினர், பழங்குடியினர் இல்லை** — 2
- **இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு** — 3
- **ஒரே கல்வி முறை** - *வழக்குரைஞர் ம. முருகேசன்* — 4
- **கல்வெட்டு – ஸ்ரீ கரிவர மல்லன்** — 7
- **குமுதம் ரிப்போர்ட்டர் – க்கு வக்கீல் நோட்டீசு** — 8
- **தில்லியில் தேவேந்திர குல வேளாளர் சங்கக் கூட்டம்** - *டாக்டர் க. கோவிந்தசாமி* — 10
- **2006 தேர்தலுக்குப் பின் தேவேந்திரர் நிலைப்பாடு** - *பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்* — 12
- **சிறு தொழில் துறையின் சிறப்புகள்** - *பேராசிரியர் ப. கனகசபாபதி* — 13
- **இலக்கியத் தொடர் – செங்கோட்டுப் பள்ளு** — 16
- **உலகளவில் குறி வழிபாடு** - *ஹாட்டர் எம். வெஸ்ட்ராப் & தமிழில் சு. கோதண்டராமன்* — 20
- **வேலன்பட்டி செப்பேடு** — 22
- **அன்புள்ள ஆசிரியருக்கு** — 23


## ஊடகங்களில் (செய்தித்தாள், தொலைக்காட்சி) செய்தியை முடிவு செய்யும் செய்தியாளர்கள், 315 பெரிய செய்தியாளர்களில் ஒருவர் கூட பட்டியல் சாதியினர், பழங்குடியினர் இல்லை

தில்லியில் உள்ள செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் முக்கிய செய்தியாளர்களாகப் பணிபுரிபவர்களின் சாதிகள் பற்றி அனில் சமாரிய (freelance journalist) ஜிடேந்திர குமார் யோகேந்திர யாதவ் (Senior fellow at the Centre for the Study of Developing Societies (SDS) ஆகியோர் ஓர் ஆய்வு செய்து வெளியிட்டுள்ளனர் (இந்து 5.6.2006).

37 ஆங்கிலம் மற்றும் இந்தி செய்தித்தாள்கள், தொலைக்காட்சியில் பணிபுரியும் 300 முக்கிய, பெரிய முடிவுகள் எடுக்கும் செய்தியாளர்களில் 8% மக்கள் தொகை கொண்ட ஆதிக்கச் சாதியினர் 71% உயர் பதவிகளில் உள்ளனர். பெண்கள், ஆதிக்கச் சாதியல்லாதவர்கள், முஸ்லீம்கள் மிகமிகக் குறைந்த அளவிலேயே உள்ளனர். 25% மக்கள் தொகை கொண்ட பட்டியல் சாதிகளைச் சேர்ந்தவர்கள், பழங்குடிகளைச் சேர்ந்தவர்கள் 315 முடிவெடுக்கும் பதவிகளில் உள்ளவர்களில் ஒருவர் கூட இல்லை. மக்கள் தொகையில் 3% உள்ள பிராமணர்கள் மட்டும் 49 சதவீத பதவிகளைப் பெற்றுள்ளனர். மராதாஸ், படேல், ஜாட், ரெட்டி போன்ற மேற்குடிகளைச் சேர்த்து 88% முக்கிய பதவிகளைப் பெற்றுள்ளன.

40 சதவீத மக்கள் தொகை கொண்ட இதர பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவாக 4 சதவீதப் பதவிகளில் உள்ளனர். மக்கள் தொகையில் 2.3 சதவீதம் உள்ள கிருத்துவர்கள் 4 சதவீத பதவிகள் பெற்று உள்ளனர். இந்தி எலக்டிரானிக் ஊடகத்தில் முஸ்லீம்கள் 6% பதவிகளில் உள்ளனர்.

இதர பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள், பிற்படுத்தப்பட்ட கிருத்துவர்கள் ஏறக்குறைய யாரும் இடம் பெறவில்லை.

செய்திகள் ஏன் ஒரு சார்பாக தில்லியிலிருந்து ஊடகங்களால் வெளியிடப்படுகின்றன என்பதற்கு இந்த ஆய்வு ஒரு விளக்கத்தைத் தருகிறது. மத்திய அரசு பட்டியல் சாதிகள், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் கோணத்தில் செய்திகள் வெளியிட அம்மக்களுக்கு ஊடகங்கள் (செய்தித்தாள், தொலைக்காட்சி அமைத்துத் தர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள ஊடகங்களும் ஏறக்குறைய இதே நிலையில் தான் உள்ளன. குறிப்பாக பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினர் ஊடகங்களில் முக்கிய பதவிகளில் இல்லாததால் அவர்களைப் பற்றிய நல்ல செய்திகள் வெளிவருவதில்லை. இழிவாகக் குறிப்பிடுதல் மற்றும் இழிவுகளைத் தரக்கூடிய செய்திகளையே வெளியிடுகின்றன.

❁ ❁ ❁

## தமிழ்நாட்டில் தமிழ் முதல் பாடமாக சட்டம்

முதல்வர் பதவி ஏற்ற கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ்நாட்டில் 1 முதல் 10 - ஆம் வகுப்பு வரை அனைத்துக் கல்விச் சாலைகளிலும் தமிழ் முதல் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் எனச் சட்டம் இயற்றியுள்ளார். இச்சட்டம் அரசிதழில் வெளியிடப்பட்டு உடனடியாகச் செயல்பாட்டுக்கு வருகிறது என அரசு அறிவித்துள்ளது. மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆங்கிலம் இரண்டாம் பாடமாக கட்டாயப் பாடமாகிறது. வேற்று மொழிகளும் விருப்பப் பாடமாக நான்காம் பாடத்தில் கற்க வகை செய்யப்பட்டுள்ளது.

நெல்லின் மக்களின் மகுட மணிக் கதிர்

# மள்ளர் மலர்

மலர் 12 இதழ் 6

மிதுனம், திருவள்ளுவர் ஆண்டு 2037

விய - ஆனி, ஜூன் 2006

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 120/-

வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,500/-

தனி இதழ் : ரூ. 10/-

**அலுவலக முகவரி**

10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் (அஞ்சல்)

கோயமுத்தூர் - 641 046

தொலைபேசி : 0422-2422287

தொலைநகல் : 0422-2425300

மின்அஞ்சல்: mallarmalar@yahoo.com

இணைய தளம்:

http://www.geocities.com/mallarmalar

**ஆசிரியர்**

முனைவர் குருசாமி சித்தர்

B.E., M.Sc.(Engg), Ph.D. (UConn-USA)

**துணை ஆசிரியர்கள்**

குரு. சித். செந்தில்குமார்

B.E., M.S., (TTU - USA)

மா. ராஜ்குமார் தேவேந்திரர் B.B.M.

மா. சிவக்குமார் தேவேந்திரர் B.E.

தேவேந்திர குல வேளாளர் சங்கத்திற்காக மாமன்னர் அச்சகம், கோவை-46 -இல் திருமதி துளசிமணி மாரியப்பன் அவர்களால் அச்சிடப்பட்டது. வெளியிடுபவர் டாக்டர் குருசாமி சித்தர்

# இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு

அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர் ஆகிய பிற்படுத்தப்பட்டோருக்கும், இதர பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அதை மத்திய அரசு பல உயர்கல்வி நிறுவனங்களில் அமுல்படுத்தாமல் இருந்தது. இந்த உயர்கல்வி நிறுவனங்களான மத்திய அரசின் ஐ.ஐ.டி. (இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி), ஐ.ஐ.எம். (இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மெண்ட்), ஏ.ஐ.ஐ.எம்.எஸ். (ஆல் இந்திய இன்ஸ்டிடியூட் ஆப் மெடிகல் சயன்ஸ்) முதலியவற்றில் இட ஒதுக்கீடு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்தப்படாமல் இருந்தது. இது வரை இந்த இடங்களை சமூகங்களில் 15 சதவீதம் மக்கள் தொகை உள்ள பிராமணர்களும் மற்ற இதர ஆதிக்கக் குடிகளுக்குமே முழுமையாக அனுபவித்து வந்தனர். மற்ற 85 சத மக்கள் சமூகத்திற்கு இடங்கள் மறுக்கப்பட்டு வந்தன.

இது ஜனநாயகத்திற்கும் தற்போதைய மத்திய அரசு இட ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தபோது 15% சதவீதமுள்ள ஆதிக்கக் குடிகள் தங்களின் செய்தி ஊடகங்களின் துணையோடு இதை வன்மையாக எதிர்த்தனர். தங்களுக்கு இந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம் கிடைக்க வேண்டும் என்பதைவிட பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றனர். காலங்காலமாக தாங்கள் மற்றவர்களைச் சுரண்டி அனுபவித்து வந்ததை பெரும்பான்மை மக்களுடன் பகிர்ந்து கொள்ள மறுக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் பொய்ச் சாக்கு (தகுதி) மெரிட் என்பது ஆகும். மெரிட் (தகுதி) என்பது கேலிக்கூத்தாக்கப்படுவது நாடறிந்த செய்தி. வேண்டியவர்களுக்கு அதிக மதிப்பெண் போடுவது வேண்டாதவர்களுக்கு மதிப்பெண்களைக் குறைப்பது. தெரிந்தவர், சொந்தக்காரார், சாதிக்காரர், வேண்டியவர் களிடமிருந்து பரிந்துரை பெற்றவர் என்கிற பல காரணங்கள் மெரிட் என்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஆசிரியர்கள், தேர்வுக் குழுக்களில் இருப்பவர்கள் எல்லாம் ஆதிக்கச் சாதிகளைச் சேர்ந்தவர்களாகையால் இவர்கள் கூறும் மெரிட் என்பது வெத்து ஓலமேயாகும்.

சென்னை ஐ.ஐ.டி. யில் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மிகச் சிறந்த பேராசிரியர் திருமதி க. மீனா கந்தசாமி அவர்கள் எப்படி இந்த ஆதிக்கச் சாதி இயக்குநர்களால் துன்புறுத்தப்படுகிறார் என்பது நாடறிந்த செய்தியாகும்.

ஒரு எடுத்துக்காட்டு : நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊர்க்காடு கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் நடந்து சென்று பள்ளியில் படித்த, தந்தை இல்லாத, படிப்பறிவில்லாத கூலித் தொழில் செய்யும் தாயின் அரவணைப்பில் படித்த, கோவையில் உள்ள ஒரு உணவு விடுதியில் டேபிள் துடைக்கும் பணி செய்து கொண்டு படித்த மாணவர் +2 இல் 1000 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். பெயர் குமார்.

இன்னொரு மாணவன் சென்னையில் சகல வசதிகளுடன் கூடிய முதல் தரப்பள்ளியில் படித்தவர். தந்தை பட்டதாரி, மதராஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தில் கூடுதல் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தாய் பட்டதாரி, இந்தியன் வங்கிப் பணியாளர். இந்த மாணவன் 1180 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். பெயர் பரசுராம். இந்த இருவரில் தகுதி, திறமை என்று பார்க்கும் போது குமாரே திறமையுள்ளவர் என்பது புலனாகும். ஆனால் இட ஒதுக்கீடு எதிர்ப்பாளர்கள் பரசுராம் என்ற பிராமண மாணவரையே மெரிட்டானவர் என்கின்றனர். இருவருக்கும் ஒரு சூழலையும் வாய்ப்புகளையும் வேலையையும் கொடுக்கும்

# ஒரே கல்வி முறை

## (ஒழிய வேண்டும் மெட்ரிக் கல்வி முறை)

ம. முருகேசன், வழக்குரைஞர்,
64, சிவவாக்கியர் குடில், மருதாபுரம், கோவை - 641 046.

தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 25 மாணவர்களுக்குக் குறைவான வருகை தரும் நூற்றுக்கும் மேற்பட்ட அரசு பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. இதற்கு முக்கிய காரணமாக காட்டப்படுவது மாணவர்கள் கல்வி கற்க வருவதில்லை என்பதே ஆகும். அவ்வாறு மாணவர்கள் கல்வி கற்க வராமைக்கு காரணம் என்னவென்று ஆராய்ந்தால் அரசு பள்ளிகளில் சரியாக சொல்லிக் கொடுப்பது இல்லை என்பது முக்கிய காரணமாகும்.

முதலில் நாம் மிகுந்த மனவருத்தத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அறுபதுகளில் ஏற்பட்ட பார்ப்பனரல்லாதோர் எழுச்சி காரணமாக பலர் கல்வி கற்று வேலைவாய்ப்பைப் பெற்றனர். அவ்வாறு அவர்கள் கற்றது அரசுப் பள்ளிகளில், மாநில பள்ளிக் கல்விக் கழகத்தின் பாடத்திட்டத்தின்படி தமிழ்வழியில் ஆகும். ஆனால் இவர்கள் வேலை பெற்று சென்றதும், அரசு ஊதியம் பெற்று வசதி வாய்ப்பை அடைந்து தம்மை சொகுசு (Elite) வகுப்பினராக கருதிக் கொண்டனர் என்பதே உண்மை. அவர்கள் தம்மைப் போல் மற்றவர்கள் வந்துவிடக் கூடாது என்ற நன்றி மறந்த செயலாகவே தம் குழந்தைகளுக்கு 1969 முதல் கொண்டு வரப்பட்ட மெட்ரிக்குலேசன் வகுப்புகளில் ஆங்கில வழியில் சேர்த்தனர். இவர்களைப் பார்த்தே சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பதைப் போல் வசதி படைத்தவர்களும் மெட்ரிக்குலேசன் பாடத்திட்டத்தின்படி ஆங்கில வழியில் சேர்த்தனர். இத்தகைய அரசு ஊழியர்களே அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறையக் காரணமானவர்கள் என்பது எவராலும் மறுக்க முடியாது. இத்தகைய அரசு ஊழியர்கள் அரசுப் பள்ளிகளில் தம் குழந்தைகளைச் சேர்த்து இருப்பார்களேயானால் அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கும் என்று உறுதியாகக் கூறலாம். மேலும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் தம் பிழைப்புக்கு அரசுப் பள்ளி ஆசிரியர் வேலை என்றும், தம் பிள்ளைகள் கல்விக்கு தனியார் பள்ளிகள் என்றுமே இருக்கின்றனர். அனைத்து அரசு ஊழியர்களும் தம் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் தான் படிக்க வைக்க வேண்டும் என்று அரசாணையிட்டால் அடுத்த நாளில் இருந்தே அரசுப் பள்ளிகளின் கல்வித் தரம் உயரும். அரசு பள்ளிகளின் கல்வித்தரம் குறையக் காரணமானவர்களும், அரசின் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பை கேட்டு வாங்கும் அரசு ஊழியர்கள் அரசுப் பள்ளிகளில் தம் பிள்ளைகளை படிக்க வைக்க முன் வர வேண்டும்.

இந்த, மெட்ரிக்குலேசன் (பதின்மக் கல்வி முறை : அதாவது பத்தின் அளவாக அமைந்தது) பாடத் திட்டக் கல்வி முறையானது, முதலில் சென்னை பல்கலைக்கழகத்தில் சில மண்டை வீங்கிகளால் உருவாக்கப்பட்டு தனித்துறையாக கொண்டுவரப்பட்டு, பின் தம்மால் நடத்தவியலாமல், தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு 1969 முதல் இக்கல்வித் (மெட்ரிக்) திட்டத்தின்படி தனியார்கள் சுயநிதி பள்ளிகளைத் தொடங்கி நடத்திட அனுமதித்தது. அப்போதே இருவேறு கல்வி முறைகள் தேவையில்லை என்றும், ஒரே வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம் என்பது போல், இருவேறு பாடத்திட்டங்களின்படி ஒருவர் அதிக பாடங்களையும், ஒருவர் குறைந்த அளவான பாடங்களையும் படிக்கும் கல்வி முறையை எதிர்த்து குரல் கொடுக்காது இருந்து விட்டோம். இக்கொடிய நோய் மெல்ல மெல்ல வளர்ந்து இன்று ஏழை, நடுத்தர மக்களின் கல்வியைக் காவு கேட்கும் உயிர்கொல்லியாக மாறிவிட்டது. ஆகவே அக்கொடிய நோயான மெட்ரிக்குலேசன் பாடத்திட்டத்தை முழுவதுமாக மூடிவிட்டு அனைத்து பள்ளிகளிலும் தமிழ்நாடு மாநில அரசு பள்ளிக் கல்விக் கழகம் (Tamilnadu State Government School Education Board) நடத்தும் பாடத்திட்டத்தின்படி மட்டுமே கற்பிக்க உடனடியாக ஆணையிட வேண்டும். இதனை எதிர்த்து யாரும் நீதிமன்றம் செல்ல இயலாது. ஏனெனில் எத்தகைய கல்வி முறை வேண்டும் என்று முடிவு செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு உள்ளது. எவ்வாறெனில் கடந்த ஆண்டுகளில் ஆங்கிலோ இந்தியன் பாடத்திட்டத்தை மூடிவிட்டு அக்கல்வி நிலையங்களில் மெட்ரிக்குலேசன் கல்வி முறை கொண்டு வரப்பட்டது இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

அதனையும் மீறி மெட்ரிக்குலேசன் கல்வியில் கொள்ளை லாபம் சம்பாதித்த கல்விக் கொள்ளையர்கள், எதிர்ப்பார்களானால் அவர்கள் விரும்பும் எந்தக் கல்வித்

---

முன்பக்கத் தொடர்ச்சி . . .

போது 1000 மதிப்பெண் பெற்ற குமாரே எல்லாச் சூழலையும் சமாளித்து திறம்பட ஒரு திட்டத்தை (புராஜட்) செய்து முடிக்கும் திறமை வாய்ந்தவர் என்பது புலனாகும்.

மத்திய அரசு இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவீத ஒதுக்கீடு என்பதில் உறுதியான முடிவெடுத்தது பாராட்டத்தக்கது. தள்ளிப் போடாமல் அதற்கான அவசர சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

❊ ❊ ❊

திட்டத்திற்கும் (மைய அரசின் கல்வித் திட்டம் உட்பட) மாறிக் கொள்ளலாம் என்று அறிவிக்கலாம். மைய அரசின் கீழ் கேந்திரிய வித்யாலயம், நவோதயா பள்ளி, மத்திய பள்ளி கல்விக் கழகம் (CBSE) ஆகியன உள்ளன. ஆனால் மைய அரசு தனியார் பள்ளிகளை ஆதரித்து, வளர்க்காது என்பதும் தனியார் கல்வி முதலாளிகளின் இலாப வேட்கை பலிக்காது என்பதை அவர்கள் (முதலாளிகள்) நன்றாகவே அறிவர். மைய அரசும், மாநில கல்வித் துறையினரைப் போல் கல்விக் கொள்கையை விட்டு வைத்திருக்காது. ஆகவே, உடனடியாக மெட்ரிக் பாடத்திட்டம் முழுவதுமாக மூடப்பட வேண்டும். அவை அனைத்தும் மாநில பள்ளிக் கல்விக் கழக பாடத்திட்டத்தின் கீழ் நடைபெறும் பள்ளிகளாக மாற்ற வேண்டும். அவர்கள் (தனியார்) ஆங்கில வழியிலேயே கற்பிக்கட்டும் நமக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

மேலும், அரசானது தனியார் பள்ளிகளில் மெட்ரிக்குலேசன் பாடத் திட்டத்தின்படி நடத்த அனுமதித்து மாணவர்களிடையே கல்வியில் பெருத்த வேறுபாட்டை உருவாக்கிவிட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் பள்ளி முதலாளிகள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களைத் துன்புறுத்தி கொள்ளை இலாபம் சம்பாதிக்கின்றனர். கடந்த ஆட்சியில் இவர்களுக்கு முதலில் கடிவாளம் போடப்பட்டு, பின்னர் படிப்படியாக தளர்த்தப்பட்டது.

மேலும், மெட்ரிக் பள்ளி நடத்தும் முதலாளிகள் மெட்ரிக் பள்ளிக் கல்வியை தமிழ்வழியிலும் கற்பிக்க அனுமதிக்க வேண்டுகின்றனர். அப்படி தனியார் பள்ளி முதலாளிகளுக்கு தமிழ்மொழியின் மீது ஈடுபாடு இருக்குமானால், முதலில் தங்கள் பள்ளியை மாநில பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் மாற்றிவிட்டு பின் தமிழ் மற்றும் ஆங்கிலம் இருவழியிலும் பள்ளியில் கற்பிக்கட்டும். பின், ஏன் மெட்ரிக்குலேசன் கல்விமுறை வேண்டாம் என்கிறோம் என்றால் மெட்ரிக்குலேசன் கல்வித் திட்டமானது மாநில கல்வித் திட்டத்தின் பாடத்திட்டத்தைவிட அதிகமானது. மெட்ரிக்குலேசன் மாணவர்கள் பத்தாம் வகுப்பு (மெட்ரிக்) தேர்வுக்கு 1100 மதிப்பெண்களுக்கு தேர்வு எழுதுகிறார்கள். மாநில பள்ளிக் கல்வித் திட்டத்தின்படியான பத்தாம்வகுப்பு தேர்வுக்கு 500 மதிப்பெண்களுக்கு மட்டுமே தேர்வு நடத்தப்படுகிறது. அதனால் என்ன என்று கேள்வி எழும். என்னவெனில் அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வியைக் கொடுத்து அவர்களுக்குள் சரியான போட்டியை உருவாக்க வேண்டுமே அல்லது சமமற்ற கல்வியைக் கொடுத்து இரு பிரிவு மாணவர்களையும் போட்டியிடவிட்டால் அதிகம் கற்றவரே அதிக மதிப்பெண் பெற்று முதல் இடம் பிடிப்பர் என்பது தெளிவாகும். எவ்வாறெனில் பத்தாம் வகுப்பு வரை மெட்ரிக் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் +1 மற்றும் +2 தேர்வை மாநில பள்ளிக் கல்விக் கழக பாடத்திட்டத்தின்படி எழுதுகிறார்கள். மாநில பள்ளிக் கல்விக் கழகத்தின் +1 மற்றும் +2 பாடத்திட்டமானது, இதே மாநில பள்ளிக் கல்விக் கழக பத்தாம் வகுப்பு பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மெட்ரிக்குலேசன் மாணவர்கள், மாநில பள்ளி கல்விக் கழகத்தின் +1 மற்றும் +2 பாடங்களை தம் பத்தாம் (மெட்ரிக்) தேர்விலேயே படித்து தேறி விடுகிறார்கள். இவர்கள் மீண்டும், தாம் படித்ததையே படிக்கும் போது +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேறுகிறார்கள். இவர்களே பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, பெரும்பாலான இடத்தை பிடித்துக் கொள்கிறார்கள்.

இந்தச் சிக்கலைத் தீர்க்கத்தான், முன்னாள் கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்கள் மாநில பள்ளி கல்விக் கழக பாடத்திட்டத்தின்படி பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு தொழில்கல்வி நுழைவுத் தேர்வில் 15 மதிப்பெண்களை கூடுதலாக வழங்க ஆணையிட்டார். இதனை எதிர்த்து நீதிமன்றம் சென்று கூடுதலாக 15 மதிப்பெண்கள் வழங்குவது சட்டவிரோதம் என அறிவித்து தடை செய்யப்பட்டது. இதனை அடுத்து, முந்தைய தி.மு.க. அரசு கிராமப்புற மாணவர்களுக்கு என 15% இடங்களை ஒதுக்கியது. இதனையும் நீதிமன்றம் செல்லாது என அறிவித்தது. ஆனால் மகாராட்டிர அரசுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் பின்தங்கிய பகுதிக்கு என இட ஒதுக்கீடு வழங்குவது சரியென அந்த மாநில உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தகைய காரணங்களால் தான் மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பது போல் மெட்ரிக்குலேசன் கல்வித் திட்டம் இருக்கும் வரை இச்சிக்கல் தொடரும். ஆகவே மெட்ரிக்குலேசன் கல்வித் திட்டத்தை முழுமையாக மூடுவது ஒன்றே சிறப்பான பலன் தருமே அன்றி வேறெந்த முடிவும் பலனளிக்காது என்பது தான் நாம் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டவர்கள் செய்ய வேண்டிய முதல் வேலை மெட்ரிக்குலேசன் கல்வித் திட்டத்தை ஒழிப்பதே ஆகும்.

மேலும், தமிழ்நாடு அரசு மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்கள் நடத்தும் ஆசிரியர் பயிற்சி (D.T.T), இளநிலை கல்வியியல் (B.Ed.) மற்றும் முதுநிலை கல்வியியல் (M.Ed.) ஆகிய அனைத்து கல்வியியல் சார்ந்த படிப்புகளையும், மைய அரசின் தேசிய கல்வி ஆராய்ச்சிக்கழகம் போல், மாநில அளவில் ஒரு பள்ளிக் கல்வி ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவி, அதன் கீழ் அனைத்து கல்வியியல் படிப்புகளையும் கொண்டுவர வேண்டும். இதற்காக மைய அரசின் தேசிய கல்வி ஆராய்ச்சிக் கழகத்தின் உதவியையும் நாடலாம். அதன்படி மாநில பள்ளி கல்வித் திட்டத்தை மேம்படுத்தலாம்.

கல்வியை குழந்தைகளுக்கு கற்பித்தல் என்பது கல்வி உளவியல் தொடர்பான விசயமாகும். ஆனால் ஆசிரியர் பயிற்சிக்கு (Teacher Training) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சியே அடிப்படைத் தகுதியாக உள்ளது. இதனை மாற்றி குறைந்தபட்ச கல்வித் தகுதியை

பட்டப்படிப்பாக கொண்டு வர வேண்டும். அப்போதுதான் கற்றலிலும் கற்பித்தலிலும் ஒரு முதிர்ச்சி இருக்கும். மேலும், பல்வேறு வகையான பாடத்திட்டங்களால் அரசுக்கு பெரும் பொருட்செலவும், நேரமும் அதிகரிக்கும்.

அடிப்படை கல்வி என்பதை பல்வேறு விசயங்களைப் பற்றி புரிந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டுமே தவிர, மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் கல்வியாக, அதனை அப்படியே தேர்வில் வாந்தி எடுக்கும் கல்வியாக இருக்கக் கூடாது. இத்தகைய கல்வியைத்தான் முந்தைய பிளவுபடாத சோவியத் ரஷ்யாவில் அளிக்கப்பட்டது. அக்கல்விமுறை அனைத்து மாணவர்களையும் ஈர்க்கும் கல்வியாக மிகுந்த வரவேற்பை பெற்றது. இத்தகைய கல்வி முறை இந்தியாவில் டேராடூனில் பெரும் பணக்காரர்கள் வீட்டுக் குழந்தைகளுக்கான கல்வி முறையாக உள்ளது. ஆனால் நமக்கு அளிக்கப்படும் கல்வியானது சுதந்திரம் பெற்ற பிறகும் மெக்காலேவின் எழுத்தர்களை (Clerk) உருவாக்கும் கல்வியாகவே உள்ளது என்பதை அறிவோம். இனி பள்ளிக் கல்வி குறித்த சமீபத்திய செய்திகளைப் பார்ப்போம்.

1. மைய அரசின் பள்ளிக் கல்விக் கழக பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களின் புத்தகச் சுமை குறைக்கப்படும், ஐந்தாம் வகுப்பு வரை வீட்டுப்பாடம் எழுதிவரத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. கர்நாடகாவின் ஓர் ஆண்டுக்கு ஒவ்வொரு பருவத்திற்கும் (காலாண்டு, அரையாண்டு மற்றும் முழு ஆண்டு) அனைத்து பாடத்திற்கும் ஒரே புத்தகமாக தயாரிக்கப்பட்டு மொத்தம் மூன்று புத்தகங்களில் ஓராண்டிற்கான அனைத்து பாடங்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. டெல்லி உயர்நீதிமன்றம் குழந்தைகளின் பெற்றோர்களிடம் நேர்முகத்தேர்வு நடத்துவதை தடைசெய்துள்ளது.

4. மகாராட்டிரம் & கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் முதல் ஐந்து வகுப்பு வரை தாய்மொழிவழி கல்வியே (அதாவது மராட்டி, கன்னடம்) அனைத்து பள்ளிகளிலும் கற்பிக்கப்பட வேண்டும் என சட்டம் செய்துள்ளார்கள்.

5. பள்ளிகளில் கட்டாய நன்கொடை பெறுவது சட்டவிரோதம் என அரசும், நீதிமன்றமும் அறிவித்துள்ளது.

6. அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இல்லாத தனியார் பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பதில் பெரிய அளவில் ஊழல் நடந்திருப்பது தெரிய வந்துள்ளது.

7. உலகம் முழுவதும் உள்ள கல்வியியலாளர்கள், மொழியியலாளர்கள் மற்றும் உளவியலாளர்கள் ஆகியோர் தாய்மொழி வழிக்கல்வியே தன்னம்பிக்கையையும், சுயசிந்தனையையும் வளர்க்கும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

நிற்க,

இவற்றில் மாணவர்களின் பாடச்சுமை குறித்தோ, தாய்மொழிவழிக் கல்வி சட்டம் இயற்றுவது குறித்தோ எவ்வித அக்கறையோ, உரிய நடவடிக்கையோ தமிழ்நாடு அரசு எடுத்ததாக இதுவரை எவ்வித அறிவிப்பும் இல்லை.

அதற்கு பதிலாக, தமிழ்நாடு அரசானது மகாராட்டிரம், கர்நாடகம் போல் தாய்மொழிவழிக் கல்விக்கென சட்டம் கொண்டு வராமல் வெறும் அரசாணை மட்டும் வெளியிட்டு நிறுத்திக் கொண்டது. இந்த அரசாணையை எதிர்த்து நீதிமன்றம் சென்று, அரசாணை செல்லாது என ரத்து செய்யப்பட்டது. உரிய சட்டம் செய்யாமல் விட்டு நீதிமன்றத்தைக் காட்டி நம் ஆட்சியாளர்கள் நீலிக்கண்ணீர் வடித்தனர்.

மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

தமிழ் நேயம் வெளியீடான "மெட்ரிக் பள்ளியில் தமிழ் (1999)" என்ற நூலில் இடம்பெற்ற கருத்தரங்க உரைச் சுருக்கங்கள் (சுருக்கம் என்னது) பின்வருமாறு :

1. "மனிதக் குழந்தையை பொருத்தவரை குழந்தை பருவம் நெடியது. கார்ல் சாகன் என்ற அறிஞர் இதைப் பற்றி விரிவாக ஆராய்ந்து கூறுகிறார். குழந்தைக்கு முதல் மூன்றாண்டுகளில் மூளை வளர்ச்சி அதிகம். ஆறு ஆண்டுகளில் மூளைவளர்ச்சி 90 சதம் ஏற்பட்டு விடுகிறது. முதல் மூன்றாண்டுகளில் குழந்தை, மொழியைக் கற்றுக் கொள்கிறது. பெற்றோர் பேசும் மொழியை இலக்கண முறைப்படி தானாகக் கற்றுக் கொள்கிறது. குழந்தைப் பருவம் என்பது பன்னிரண்டு ஆண்டுகள். குழந்தை ஐந்தாவது வகுப்பு முடிக்கும் பொழுது குழந்தையின் மூளை வளர்ச்சி முதிர்ச்சி அடைகிறது. ஆகவே ஐந்தாம் வகுப்பு முடிய தாய்மொழியில் கற்பதுதான் சிறந்தது என்பதில் ஐயமில்லை".

"முன்பெல்லாம் 5 வயது முடிந்து 6 ஆவது வயதில்தான் குழந்தைகளை பள்ளியில் சேர்த்துக் கொள்வது என்று விதி இருந்தது. 1970களில் 4,5 வயது குழந்தைகளுக்கு "கின்டர் கார்டன்" என்ற கல்விமுறை வந்தது. இதைத்தான் K.G. என்று சொல்கிறோம். பணம் பண்ணுவதற்கு இன்னொரு வழிமுறையைக் கண்டுபிடித்தார்கள். 4, 5 வயது குழந்தைகளுக்கு Upper K.G. 3 வயது குழந்தைகளுக்கு Lower K.G. இதில் அறிவியல் முறை என்று ஏதுமில்லை. இப்பொழுது 2 1/2 வயது குழந்தைகளுக்கு Pre K.G. குழந்தைகள் சிறுவயதில் 7, 8 மணிவரை தூங்கியெழ வேண்டும். குழந்தைகளுக்கு இது நல்லது. குழந்தைகளை 6,7 மணிக்கு மிரட்டி எழுப்புகிறார்கள். பிஞ்சு விரல்களில் எழுதச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் குழந்தைகளைப் பாழ்படுத்துகிறார்கள்".

**தி. அரசன் கோவன்**

2. "ஆங்கிலம் தான் வேண்டும் என்று துணிச்சலோடு மெட்ரிக் பள்ளிகள் அதிலும் குறிப்பாக கிறித்துவப் பள்ளிகள் கிளம்பியிருக்கிறார்கள்".

"25 மாணவர்கள் இல்லாத பள்ளிகளை மூடவேண்டுமென்று அரசுவிதி, உடனே ஆசிரியர்கள் தெருவுக்கு வந்து பள்ளிகளை மூடக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்".

- **திரு. கு. இராமகிருட்டிணன்**

3. "மெட்ரிக் (பதின்மம்) பள்ளி என்பதை நுழைமுகப் பள்ளி என்று தான் சொல்ல வேண்டும்".

- **திரு. அடிகள் இரும்பொறை**

4. "ஆங்கிலப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க பெற்றோர்கள் பலரையும் கெஞ்சிக்கேட்டு, வருந்திச் சேர்க்கிறார்கள். குழந்தைகள் மூட்டை தூக்கிகளாகிறார்கள். பேருந்துகளில் அவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. பள்ளிகளும் வீடுகளும் குழந்தைகளுக்கு சிறைச்சாலைகள், எப்பொழுது பார்த்தாலும் படி, எழுது என்கிறார்கள். பெற்றோர்கள் வீட்டுப் பாடங்களை எழுதிக் கொடுக்கிறார்கள். குழந்தைகள் சரியாக உண்ணுவதில்லை. உடலின் செழுமை மட்டுமல்ல, மனச்செழுமையும் கெடுகிறது".

- **புலவர் திருமதி. சிவகாமி**

5. "ஆங்கிலத்தைக் கூட தமிழ் வழியாக கற்றுத் தருகிறார்கள். கற்றுக் கொள்வதற்கான ஒரே வழி மனப்பாடம் செய்வதுதான். ஆங்கிலம் கற்றுக் கொள்வது என்பது வேறு, ஆங்கிலம் வாயிலாகக் கற்றுக் கொளவ்து என்பது வேறு".

- **முனைவர் திரு. இராம. திருநாவுக்கரசு**

❋ ❋ ❋

**கல்வெட்டு**

## ஸ்ரீ கரிவர மல்லன்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள இந்திய தொல்லியல் துறையினர், 2004 - 2005 இல் மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் மேல உரப்பனூரில் உள்ள ஏரிக்கரையில் ஒரு கல் தூணில் உள்ள கல்வெட்டைப் படி எடுத்துள்ளனர். இரண்டு வரிகளைக் கொண்ட அதன் வாசகம்

**வரி**

**1 ஸ்ரீ கரி வ**

**2 ர மல்லந்**

என்பதாகும். இக்கல்வெட்டு கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கணித்துள்ளனர்.

மருத நிலத் தலைமக்களான மல்லர்கள் நீர்பாசனத்திற்கான ஏரிகளை, குளங்களை நிறுவிப் பாதுகாத்துள்ளனர் என்பதை இக்கல்வெட்டு காட்டுகிறது. இது இன்னும் எண் கொடுக்கப்பட வில்லை. கல்வெட்டைப் பெற உதவிய டாக்டர் கருப்பையா அவர்களுக்கு நன்றி.

## பணி நிறைவு பாராட்டு விழா கரூர் உடற்கல்வி இயக்குநர் மணிமாறனுக்கு

கரூர் காவேரி அம்மன் திருமண மண்டபத்தில் 4.6.2006 அன்று வீரராக்கியம் பள்ளியில் உடற்கல்வி இயக்குநராகப் பணிநிறைவு செய்து ஓய்வு பெற்ற வி.கே. மணிமாறனுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. விழா விற்கு கரூர் மூத்த வழக்கறிஞர் **எஸ். சண்முகம்** தலைமை வகித்தார். **பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்**, முன்னாள் சட்டப பேரவை உறுப்பினர் **பி.எம். தங்கவேல் ராஜ்**, கரூர் வழக்கறிஞர் **ஏ. முத்துசாமி**, கரூர் தேவேந்தி ரரின் அம்பேத்கார் தலைமை மன்றத் தலைவர் **என்.எஸ். முத்துசாமி**, சோழூர் நாட்டு பொறுப்பாளர் கடம்பை **பி. பொன்னுசாமி** ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் **பேராசிரியர் பி.எஸ். கருப்பையா, கடவூர் மணிமாறன், ஆர்.எம். தியாகராசன், விஸ்வநாதபுரி எஸ். கருப்பண்ணன், எம். கலைச்செல்வன், ஒ. வேம்புசாமி, சோழூர் நாட்டு மூப்பனார், எஸ்.கே.எஸ். செல்வராஜ், கரூர் அரசு கலைக்கல்லூரி முன்னாள் முதல்வர் குணசேகரன் டாக்டர் மாரிமுத்து, டாக்டர் கோவிந்தசாமி, ஏ. பழனிச்சாமி, டாக்டர் அம்பேத்கார்**, புலியூர் பேரூராட்சித் தலைவர் **கா. கிருஷ்ணன்** மற்றும் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு மணிமாறன் அவர்களைப் பாராட்டினர்.

பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் பேசும்போது மணிமாறன் பகுதி நேர சமூக ஊழியராக இருந்து முழுநேர சமூக சேவகராகப் பணியாற்ற வருகிறார். அவரைப் பாராட்டி வாழ்த்தி வரவேற்கிறோம் என்றார். தேவேந்திரர் தம்மை தமிழர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் என்ற வரலாற்றை உணர்ந்து தம்மை அந்நிலைக்குத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மீண்டும் அந்த உயர்ந்த நிலைக்கு நமது மக்களை இட்டுச் செல்லப் பாடுபட வேண்டும் என்றார்.

முன்னதாக மாயனூர் **தியாகி வீ. சுப்புரத்தினம்** அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மணிமாறன் அவர்கள் ஏற்புரை நிகழ்த்த பொதுச் செயலாளர் **அ. மச்சேந்திரன்** நன்றியுரை நிகழ்த்தினர்.

❋ ❋ ❋

## திருமண வாழ்த்துக்கள்

**மு. கவுதமன், பி.இ., எம்.பி.ஏ., - க. ஹேமலதா, டி.இ.இ.இ.,**

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டம், வீராந்தகநல்லூர் **புலவர் ப. முத்துக்கிருஷ்ணன் தேவேந்திரர்** குமாரர் திருவளர் மள்ளர் **கவுதமனுக்கும்**, மதுரை மாவட்டம் சமயநல்லூர் **அ. கண்ணபிரான் தேவேந்திரர்** குமாரத்தி திருவளர்மள்ளி **ஹேமலதாவுக்கும்** 28.5.2006 அன்று திருச்சி சீனிவாசா திருமண மண்டபத்தில் திருமணம் நீதியரசர் எம். மருதமுத்து தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்கு மள்ளர் மலரின் வாழ்த்துக்கள்.

❋ ❋ ❋

# குமுதம் ரிப்போர்ட்டர்-க்கு வக்கீல் நோட்டீசு
# தேவேந்திரரை தலித் என்று கூறி இழிவுபடுத்தியதற்காக

திரு. பசுபதிபாண்டியன் துணைவியார் படுகொலை செய்யப்பட்ட செய்தியை வெளியிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் தேவேந்திர குல வேளாளர்களைக் குறிக்க தலித் என்ற சொல்லைப் பயன்படுத்தியதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லையேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படும் என கரூர் இரா. பாண்டியனின் வழக்கறிஞர் நோட்டீசு அனுப்பியுள்ளார். அதன் நகல் கீழே தரப்பட்டுள்ளது.

அடுத்து அதேபோல் தினமலர் நாளிதழுக்கு திரு. ஜான் அய்யாதுரை வழக்கறிஞர் திரு. கிருஷ்ணசாமி மூலம் அனுப்பிய நோட்டீசு அடுத்துத் தரப்பட்டுள்ளது.

(1)

**இரா. ஜீவானந்தம், பி.எஸ்சி., பி.எல்.,**
வழக்கறிஞர், 207 கருணை இல்லம்,
87, இராஜாஜி தெரு, கரூர் - 639 001.
தொலைபேசி : 04324 237445,
அலைபேசி : 98432 37445
மின்னஞ்சல் : jeevaantham103@sancharnet.in

நாள் : 5.2006

**பெறுநர் :**

**செ. இளங்கோவன்**
ஆசிரியர்,
குமுதம் ரிப்போர்ட்டர், (வாரம் இருமுறை இதழ்)
குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட்,
பழைய எண், 151, புதிய எண் 306,
புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை - 10.

**அய்யா,**

எம் கட்சிகாரர் இரா. பாண்டியன், த/பெ இராமசாமி தேவேந்திரர், வயது 30, செயலாளர், தேவேந்திரர் தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம், இலக்குமி ராமசாமி நினைவு இல்லம், திருக்காம்புலியூர், எல்.என்.எஸ். அஞ்சல், கரூர் வட்டம், கரூர் மாவட்டம் என்பவரின் அறிவுறுத்தலின் பேரில் உங்களுக்கு கொடுக்கும் அறிவிப்பு பின்வருமாறு :

1. எம் கட்சிக்காரர் தேவேந்திரர் தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம், செயலாளராக செயல்பட்டு வருகிறார்.

2. எம் கட்சிக்காரர் தேவேந்திரர் தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம் என்ற அமைப்பின் மூலம், தமிழ் மூவேந்தர்கள் குறித்தும், அவர் தம் ஆட்சி, மக்கள் வாழ்நிலை, தமிழ் பண்பாடு, கலாச்சாரம் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்து மக்களிடையே தமிழ் பண்பாடு, கலாச்சாரத்தின் தொன்மை சிறப்பு, மேன்மை குறித்து பரப்பி வருகிறார்.

3. குமுதம் ரிப்போர்ட்டர் 16.04.2006 தேதிய இதழ் பக்கம் 26-28 ல் வெளியாகியுள்ள திரு. எஸ். அண்ணாதுரை என்பவரால் எழுதப்பட்ட பசுபதி பாண்டியன் மனைவி கொலை அரசியலாக்குகிறாரா முதல்வர்? என்ற கட்டுரையில் ஆங்காங்கே ஐந்து இடங்களில் தலித் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. தலித் என்ற வார்த்தை தேவேந்திர குல வேளாளர்களை குறிக்கவே அக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. அரசமைப்பு சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட அட்டவணை சாதிகளின் பட்டியலில் தலித், தாழ்த்தப்பட்டவன் என்ற வார்த்தைகள் இல்லை, அட்டவணை சாதிகளின் பட்டியலில் தேவேந்திர குல வேளாளர்கள் தேவேந்திர குலத்தான், கடையன், காலாடி, குடும்பன், பள்ளன், பண்ணாடி, வாதிரியன் என்றே குறிக்கப்பட்டுள்ளனர்.

5. Schedled Caste என்ற ஆங்கில சொல்லுக்கு தமிழில் அட்டவணை சாதி என்றே அர்த்தம். வேறு பொருள் ஏதும் இல்லை. குறிப்பாக தலித், தாழ்த்தப்பட்டவன் என்ற அர்த்தம் அறவே கிடையாது. தலித் என்ற சொல்லாட்சி தீண்டத்தகாதவன், கீழ்மக்கள் என்பதையே குறிக்கிறது.

6. தேவேந்திர குல வேளாளர்கள் தலித்துகள் அல்லர். தேவேந்திர குல வேளாளர்களை தலித் என அடையாளப்படுத்தக் கூடாது என தமிழகத்தில் உள்ள பல்வேறு தேவேந்திரர் குல அமைப்புகளும் தலைவர்களும் அறிவித்துள்ளனர். தேவேந்திர குல வேளாளர்கள் தமிழ் மூவேந்தர் மரபினர் எனவும் செந்நெல் முதுகுடியெனவும் பல வரலாற்று அறிஞர்களும் வரலாற்று, இலக்கிய சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.

7. இந்நிலையில் குமுதம் ரிப்போர்ட்டர் 16.04.2006 தேதிய இதழ் பக்கம் 26 - 28 ல் வெளியாகியுள்ள கட்டுரையில் தலித் என்ற வார்த்தை தேவேந்திர குல வேளாளர்களை குறிக்கவே பயன்படுத்தி தமிழ் மூவேந்தர் மரபினரான, செந்நெல் முதுகுடியான தேவேந்திரர்களை தலித் என அவதூறு செய்துள்ளீர்கள். உங்களது ஷ கட்டுரையால் எம் கட்சிகாரர் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார். எம் கட்சிகாரர் போன்றே கோடிக்கணக்கான தேவேந்திர குல மக்களும் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார்கள்.

8. எனவே இவ்வறிவிப்பு கிடைத்த 7 நாட்களில் தாங்கள் தேவேந்திர குல வேளாளர்களை தலித் என குறிப்பிட்டதற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரி தங்கள் பத்திரிக்கையில் அறிக்கை வெளியிட வேண்டும். தவறினால் உங்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**வழக்கறிஞர்**
**இரா. ஜீவானந்தம்,**

(2)

*2006 ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள்,*

*ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண், 117 - மாடி, சிவகாசி மெயின் ரோடு, கனரா பேங்க் எதிர்புறம் என்ற முகவரியில் இருக்கும் வழக்கறிஞர் திரு. **பொ. கிருஷ்ணசாமி,** பி.எஸ்ஸி., பி.எல்., ஆகிய நான்.*

*ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, கோட்டைப்பட்டி கிராமம் என்ற முகவரியில் இருக்கும் கோபால் என்பவரது குமாரர் ஓய்வு பெற்ற தலைமைக் காவலர் தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் சங்க விருதுநகர் மாவட்ட துணைத் தலைவர் பொறுப்பு வகிக்கும் **ஜான் அய்யாத்துரை** ஆகிய எமது கட்சிக்காரரின் முறையான தகவல்கள் பெற்று,*

*தினமலர் நாளிதழின் மதுரைப் பதிப்பின் எடிட்டர் மற்றும் அச்சிட்டாளர் பொறுப்பு வகிக்கும் கிருஷ்ணமூர்த்தி - 1,*

*ஷை தினமலர் நாளிதழின் மதுரைப் பதிப்பின் வெளியீட்டாளர் பொறுப்பு வகிக்கும் லட்சுமிபதி - 2,*

*ஷை 1 மற்றும் 2 நபர்களாகிய தங்களுக்கு அனுப்பும் வக்கீல் ரிஜிஸ்டர் நோட்டீஸ் யாதெனில்.*

*1. தாங்கள் ஷை தினமலர் நாளிதழின் மதுரைப் பதிப்பில் எடிட்டர் மற்றும் வெளியீட்டாளர் பொறுப்பில் செயல்பட்டு வருகிறீர்கள். தங்களின் ஷை இதழ் மதுரை மாவட்ட பதிப்பிலிருந்து லட்சக்கணக்கில் வெளியிடப்பட்டு வருகிறது என்பது ஊரறிந்த உண்மை. எனவே ஷை இதழின் செய்திகள் மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு ஒவ்வொரு செய்தியும் சென்றடைகிறது என்பதும் உண்மை ஆகும்.*

*2. ஷை எமது கட்சிக்காரர் தேவேந்திர குலத்தைச் சார்ந்தவர் ஆவார். அவரது சமூகம் உள்ளிட்ட இதர சமூகங்களின் பெயர்கள் அரசியலைமைப்புச் சட்டத்தால் வரையறை செய்யப்பட்ட சாதிப்பட்டியல் பட்டியல் இன சாதி என்ற தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஷை பட்டியலில் தாழ்த்தப்பட்டவர்கள் என்றோ தலித் என்றோ குறிப்பிட்ட சமுதாயம் இல்லை என்பதும் ஊரறிந்த உண்மை ஆகும். அவ்வாறு இருக்கும் போது தாங்கள் தங்கள் பத்திரிக்கைச் செய்தியில் தாழ்த்தப்பட்ட மற்றும் தலித் என்ற வார்த்தைகளை பிரசுரம் செய்து வருகிறீர்கள். ஷை வார்த்தைகள் பட்டியல் இன மக்களை மிகுந்த அவமானத்திற்குள்ளும், மிகுந்த மன வேதனைக்குள்ளும் உண்டாக்குகிறது. ஷை செயலால் ஷை பட்டியல் இன மக்களை பொது ஜனங்கள் மத்தியில் தீண்டத்தகாதவர், இழிந்த தொழில் செய்பவர், அசுத்தமானவர், கீழ் மக்கள் மற்றும் பிணம் எரிப்பவர் என்ற நிலையில் அசிங்கமாகப் பேசக்கூடியதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளது என்றும் கூறுகிறார்.*

*3. எனவே ஷை செயல்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு தங்களுக்கு 26.02.2006 மற்றும் 14.03.2006 ஆகிய தேதிகளில் ஷை எமது கட்சிக்காரர் கடிதமும் போட்டுள்ளார். இதே போல மற்ற நாளிதழ்களுக்கும் போட்டுள்ளார். அதனைப் பெற்றுக் கொண்ட மற்ற நாளிதழ்களான தினகரன் மற்றும் மாலைமலர் நாளிதழ்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற அவமான வார்த்தையை நீக்கிவிட்டு பட்டியல் வகுப்பு மக்கள் என்று பிரசுரம் செய்து வெளியிட்டன. அவைகளின் ஜெராக்ஸ் நகல்களைத் தங்களின் கவனத்திற்கு இத்துடன் அனுப்பியுள்ளோம். அதனையும் விட மேலாக எந்தவிதமான வார்த்தைகளையும் போடாமலும் கூட பிரசுரம் செய்துள்ளன. ஆனால் தாங்கள் மீண்டும் மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சமுதாயத்தில் அவமானத்தையும், அருவறுப்பையும் ஏற்படுத்தக்கூடிய வார்த்தைகளையே பிரசுரம் செய்து வருகிறீர்கள். உதாரணமாக தங்களின் தினமலரின் 21.05.2006 ஆம் நாள் பத்திரிக்கையின் 5 ஆம் பக்கத்தில் பிரசுரம் செய்துள்ளீர்கள். இது வன்மையாகச் சட்டப்படிக்குக் கண்டிக்கக் கூடியது ஆகும். காரணம் தங்களின் இந்த செயல்பாடு சண்டை மூட்டி விடுதல், அவமானத்தை ஏற்படுத்துதல் போன்ற இ.த.ச.பிரிவு 153ஏ, 500 மற்றும் வன் கொடுமைச் சட்டப்பிரிவு 3(1) ( ) ஆகிய குற்றச் செயல்கள் புரிந்ததாக உள்ளது.*

*4. தங்களுக்கு பல முறை அறிவிப்பு செய்தும் கூட தாங்கள் இவ்வாறு பிரசுரம் செய்வதால் ஷை எமது கட்சிக்காரரின் சமூகத்தில் உள்ள இரண்டு கோடி மக்களின் புகழுக்கும், நன்மதிப்பிற்கும் பங்கம் விளைவிப்பதாக உள்ளது. இது தங்களின், அதாவது, பத்திரிக்கை விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட, ஏதேச்சதிகாரச் செயலையும், பத்திரிக்கைத் தர்மத்தையும் மீறிய செயலாகவும் உள்ளது.*

*ஆகையால் தாங்கள் இந்த நோட்டீஸ் கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தங்கள் பத்திரிக்கை மூலம் பகிரங்க மன்னிப்பு விடுத்தும், அதே போல பின் நாளில் இவ்வாறான தவறுகள் நடக்காது என்பதற்கான உத்தரவாதமும் எமது கட்சிக்காரருக்கு செய்து கொடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்வதன் மூலம் மற்ற சமூக மக்களுக்குள் ஷை எமது கட்சிக்காரரின் சமூக மக்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் தலித் என்ற அடைமொழி இல்லாமல் எல்லோரும் மனித குலம் என்ற அடிப்படையில் தலை நிமிர்ந்து வாழ ஏதவாக இருக்கும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தவறும்பட்சத்தில் ஷை செயல்பாடுகளுக்காக தங்கள் மீது உரிய நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படும் என்றும் இதன் மூலம் கண்டிப்பாக அறிவிக்கலாயிற்று.*

*ஸ்ரீவில்லிபுத்தூர்* **வழக்கறிஞர்**
*22.05.2006* **கிருஷ்ணசாமி**

**இணைப்பு** : *ஜெராக்ஸ் நகல்கள்*

*1. தினகரன், 2. மாலைமலர், 3. தினமலர் ஆகிய நாளிதழ்களின் பிரசுரங்களின் செய்திகள்.*

❁ ❁ ❁

# தில்லியில் தேவேந்திர குல வேளாளர் சங்கக் கூட்டம்

டாக்டர் க. கோவிந்தசாமி, தஞ்சாவூர்

சென்ற மாதம் 7.4.06 முதல் 27.4.2006 வரை சென்னையிலிருந்து கோவா - மும்பை - அபுமலை - ராஜஸ்தான் - சம்மு - காஷ்மீர் - குருசேத்திரம் - டில்லி - என குழு சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டேன். நான் ஒருவன் தான் தேவேந்திரன். டில்லியில் 22, 23, 24 ஆகிய நாட்கள் தங்கியிருந்த போது நமது இன மக்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு அவர்களுடன் 22.4.06 மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி கலந்து உரையாடினோம். கலந்து கொண்டோர் டில்லி தேவேந்திர குல வேளாளர் சங்க நிர்வாகிகள். தலைவர் ஏ.வி. **முனியப்ப தேவேந்திரர்**, துணைத் தலைவர் **இராமசாமி தேவேந்திரர்**, பொதுச் செயலாளர் **சாலை. விஜயகுமார்**, துணைச் செயலாளர் **கந்தசாமி தேவேந்திரர்**, பொருளாளர் **முருகேசன் தேவேந்திரர்**, திரு. **பி. கோபால் தேவேந்திரர்** எம்.ஏ., மும்பை தலைவர் மற்றும் சிலர் கலந்து கொண்டனர். தமிழகத்திலிருந்து வந்த சமூகப் பற்றுள்ள என்னை ஏற்கனவே சிலருக்குத் தெரியும். அனைவருக்கும் அறிமுகம் செய்து கலந்துரையாடினோம். மள்ளர் மலர் வாசகர்கள் வட்டம் என்று மாதம் ஒரு முறை அல்லது 2 மாதம் என்ற அளவில் டில்லியில் வாழும் தேவேந்திரர்கள் கூடி கலந்துரையாட வேண்டும் என்றும் நமது இன முரசு **மள்ளர் மலர்** அனைவரும் தவறாது சந்தா செலுத்தி அல்லது மொத்தம் 100 படிகள் என்ற அளவில் வரவழைத்து கூட்டம் நடைபெறும் நாள் குறிப்பிட்டு வினியோகம் செய்தால் தான் சிறப்பாக இருக்கும். நமது இனப் பெருமைகள் பலருக்குத் தெரியவில்லை. மற்றும் சமூகத்தில் செட்டியூல் சாதிகள் பட்டியலில் இருந்தால் தான் வேலை வாய்ப்பு, படிப்பு என்று பலரும் கருதிக் கொண்டிருப்பது சரியல்ல. எல்லோருக்கும் எல்லாவிதமான படிப்பு, வேலை வாய்ப்பு திறமையின் அடிப்படையிலும், போட்டியிலும் தான் கிடைக்கிறது. சாதியினால் ஒன்றும் இல்லை. செட்டியூல்டு சாதிகள் பட்டியலில் இருப்பது இழிவு ஒன்றுதான். ஆகவே இது பற்றி 23.04.06 ல் சகர்பூரில் கூடி பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து விளக்கம் பெறலாம் என்ற அளவில் இரவு 8.30 மணி முடிவுற்றது. அனைவரும் நாங்கள் தங்கியிருந்த கரோல் பார்க் இடத்திலிருந்து கலைந்து சென்றனர்.

23.04.2006 ஞாயிறு இரவு 8.30 மணி அளவில் டில்லி, சக்கூர்பூர் நமது இன மக்கள் பெருவாரியாக வாழும் பகுதியில் மிக சிறப்பாகக் கட்டப்பட்டுள்ள மாரியம்மன் கோவில் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைமை : திரு. எம். முருகேசன் தேவேந்திரர் பொருளாளர், துணைத் தலைவர் இராமசாமி தேவேந்திரர், துணைச் செயலாளர் கந்தசாமி தேவேந்திரர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் வரவேற்புரை செயலாளர் திரு. சாலை. விஜயகுமார் ஆற்றினார். தேவேந்திரர்களின் பெருமைகளை, புகழை தமிழகத்திலிருந்து வந்துள்ள இன உணர்வாளர் மூவேந்தர் இலக்கிய மன்றத்தின் செயலாளர் தஞ்சை டாக்டர் கோவிந்தசாமி விளக்கமாக எடுத்துக் கூறுவார் என்று கூறி தனது வரவேற்புரையை நிறைவு செய்தார். தலைமை ஏற்ற பொருளாளர் முருகேசன் தேவேந்திரர் அவர்கள் அறிமுக உரையுடன் கூட்டம் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது குறித்தும் பேசினர். சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட தஞ்சை டாக்டர் கோவிந்தசாமி அவர்களது கருத்துரையை எல்லோரும் எதிர்பார்ப்பதால் அவருக்கு அதிக நேரம் பேச அனுமதிக்க வேண்டும் என்று தனது உரையை முடித்துக் கொண்டார்.

தஞ்சை டாக்டர் க. கோவிந்தசாமி சிறப்புரையில், தேவேந்திரர்களின் பெருமைகள் மற்ற இன மக்களுக்கு எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் இந்த இனம் செட்டியூல்டு சாதிகள் பட்டியலில் 1950 முதல் சேர்த்து அரசியல் ஆதாயம் பெற்று வருகிறது தமிழக அரசியல். நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கு முன்பு இந்த இனம் தான் பெருமை மிக்கதாக நாடாண்ட இனம் என்பது ஆய்வு மூலம் கண்டனர். ஆங்கில அரசுக்கு முன் நடந்த போரில் சூழ்ச்சியாக வந்தேறிகளால் தமிழ் அரசர்களாகிய தேவேந்திரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அரசர் தோற்றுப் போய்விட்ட நிலையில் அரச குடும்பங்கள் தங்கள் செல்வாக்கை இழந்தனர். அவர்களை தொடர்ந்து அந்த இன மக்கள் செல்வாக்கு, சொத்துகள் அனைத்தும் இழந்து சொந்த மண்ணிலேயே விவசாய கூலிகளாக மாற்றம் பெற்றிருந்தனர். பின்னர் வந்த ஆங்கில அரசு அப்படியே வைத்துக் கொண்டு தங்கள் ஆட்சி நடைபெற என்ன செய்ய முடியும் என்று எண்ணியவர்கள் வழிபாட்டுக்கு சர்ச்சுகள், அதை ஒட்டிய பள்ளி, மருத்துவமனை என்ற அளவில் செய்துவிட்டனர்.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வரவில்லை என்றால் நமக்கு கல்வி அறிவு கிடைத்திருக்காது. மக்களின் முன்னேற்றத்திற்கு யார் யார், படிப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் பின் தங்கி இருக்கிறார்கள் என்ற பட்டியல் தயார் செய்து அதை வைத்து முன்னுரிமை தந்து அனைவருக்கும் சம வாழ்வு அளிக்க எடுத்த கணக்குப்படி தமிழகத்தில் தேவேந்திரர்கள் முதன்மையாக வைத்து முன்னேற வேண்டியவர்கள் என்ற விதத்தில் தயார் செய்யப்பட்ட பட்டியல் பின்னர் வந்த விடுதலை பெற்ற சுதந்திர இந்தியாவில் பட்டியல் இன மக்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி சலுகைகள் அறிவித்தார்கள். செம்மாந்து வாழ்ந்த இனம் செட்டியூல் சாதிகள் பட்டியலில் மள்ளர் என்னும் தேவேந்திரர், தேவேந்திர குலத்தான் என்னும் பெயருடன் இழிவு பட்டியலில் சேர்த்தனர். இனாம் பெறும் மக்களாக

பொருளாதார நலிவு, சமூக இழிவு இவைகள் தொடர்ந்து பற்றிக் கொண்டது. இழிவு பற்றி யாரும் கவலைப்படாமல் சுய சாதி உயர்வு பேசி வந்துவிட்டார்கள். கல்வி அறிவு இல்லை, வெந்ததை தின்று விதி வந்தால் சாவோம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

600 ஆண்டுகளுக்கு முன் அரசர்களாக வலம் வந்தவர்கள், காங்கிரசு ஆட்சியில் அரிசனனாக கூனி குறுகி விட்டார்கள். தொடர்ந்து அந்த அவலம் நம்மைச் சுற்றிக் கொண்டது. 1977 ல் முன்னாள் டிபுடி கலெக்டராகப் பணியாற்றிய தேவேந்திரர் மூதறிஞர் இரா. தேவ ஆசிர்வாதம் அவர்கள் தனது ஆய்வில் இன்றைய பள்ளர்கள் தான் முன்னாளில் அரசு நடத்தி, உழவு நடத்தி மற்றவர்களுக்கு உணவளித்து அரசு மூலம் அனைத்து மக்களையும் கட்டிக் காத்தனர் என்ற வரலாற்று உண்மையை மூவேந்தர் யார்? என்ற நூலில் தெரிவித்தார். சமூகத்தில் சிலர் தான் விழிப்பு பெற்றார்கள். அவர்களில் மரியாதைக்குரிய கோவையைச் சேர்ந்த பொறியாளர் டாக்டர் குருசாமி சித்தர் அவர்கள் திரு. தேவ ஆசிர்வாதம் அவர்களை முதன்மையாகக் கொண்டு முதல் மாணவனாக தேவேந்திர குலத்தை மேலும் ஆய்வு செய்து தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படுகின்ற மள்ளர் என்ற சொல் தேவேந்திர குல வேளாளர்களைக் குறிக்கின்றது என்ற நிலையில் மிகப் பெரிய ஆய்வு நூல் தமிழ் இலக்கியத்தில் மள்ளர்கள் தேவேந்திர குல வேளாளர்கள் (அடிப்படைச் சான்றுகள்) என்ற நூலாக்கினர்.

தொடர்ந்து **மள்ளர் மலர்** என்ற மாத வெளியீட்டுக்கு ஏற்பாடு செய்து 1995 சனவரி முதல் தொடர்ந்து வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு அறிஞர்களை அழைத்து விவாத மேடையாக்கி மள்ளர்களின் சான்றுகளை பல்வேறு தலைப்புகளில் சில நூலாகவும் பல இன்னும் நூலாக்கம் பெறும் வகையிலும் உள்ளது. தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது உலக தமிழறிஞர்கள் அனைவருக்கும் 500க்கும் மேற்பட்ட அவரது ஆய்வு நூலான இலக்கியத்தில் மள்ளர் / பள்ளர் / தேவேந்திர குல வேளாளர் அடிப்படைச் சான்றுகள் என்ற நூல் இலவசமாக வழங்கினார். 1995 முதல் 11 ஆண்டுகள் மள்ளர் மலர் தனது இனமான பணியைச் செய்து வருகிறது. அனைவரும் நமது பெருமைகளை தெரிந்து கொள்ள மள்ளர் மலர் படியுங்கள். மாதம் ஒருமுறை கூடுங்கள். வெளி மாநிலம் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வியாபாரம் மற்றும் இதர தொழில்கள் செய்து வருகிறீர்கள். ஆகவே உங்களது அமைப்பான தேவேந்திர குல வேளாளர் சங்கம் இன்னும் பலப்படுத்தப்பட்டு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். இந்திய தலைநகரில் நீங்கள் பெருமளவில் கூடியது மிக்க மகிழ்ச்சி. மள்ளர் மலரின் வளர்ச்சியிலும் நீங்கள் கவனம் செலுத்திட வேண்டும். பல இயக்கங்களுடன் கூடி பொது நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். அதற்குத் தடையாக இருப்பது சாதி. தாழ்த்தப்பட்ட சாதியை எவனும் சேர்க்க முன்வரமாட்டான். ஆகவே பட்டியலிலிருந்து விடுபட டில்லியில் சிறப்பான முறையில் மாநாடு நடத்திடவும், தமிழகத்தில் தொடர்புடைய அனைவரும் வந்து சிறப்பிக்க ஆவண செய்யப்படும் எனவும் சனாதிபதியை சந்தித்து இந்த இன விடுதலைக்கு வித்திட தலைமையிடத்தில் உள்ள நீங்கள் இன்னும் பெருமளவில் கூடி கலந்து பேசி முடிவு செய்யுங்கள்.

இழிவு ஒழிக்கப்பட்டால்தான் உயர்வு பெற இயலும். முதலும் கடைசியும் நமது இனப் போராட்டம் முற்றிலும் பட்டியல் இனத்திலிருந்து விடுப்பதுதான். பள்ளி கல்லூரிகளில், சேருவதற்கு மதிப்பெண் தான் முக்கியமாக கருதப்படுகிறது. பின் தங்கிய மிகவும் பின் தங்கிய இனத்தைவிட அதிகமான மதிப்பெண்கள் பெற்றும் பட்டியல் இனத்தில் அடைத்து விடுகிறார்கள். முன்னேறிய சாதி வாங்கும் மதிப்பெண்களை விட பிற்பட்ட இனம், மிகவும் பிற்பட்டவர்களை விட பட்டியல் இனத்தில் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டிய அவல நிலை, பட்டியலில் இழிவு, மதிப்பெண் அதிகம் பெற வேண்டும். சிலர் நினைப்பது போல் குறைவான மதிப்பெண் பெற்றால் போதும் என்பது போலித்தனமான நம்பிக்கை. திறமையை வளர்த்துக் கொள்ளவும் முதன்மையாக வரவும் நாம் முயன்றால் முடியும். தன் நம்பிக்கை தான் அவசியம். தன்னம்பிக்கைதான் உயர்வானது. இழிவு மதிப்பெண் குறைவு, செட்டியூல்டு சாதிகள் பட்டியலில் இருந்தால் தான் வேலை வாய்ப்பு என்பது கானல் நீர். அனைவரும் சிந்திக்க வேண்டும். 31.7.05ல் மருத்துவ முகாம் சேர்ந்து நடத்தியுள்ளீர்கள், மிக்க மகிழ்ச்சி. டில்லியில் முருகன் கோயில் உள்ளது. அதில் போய் தேவேந்திரர்கள் உரிமை பெற்று மண்டகபடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சித்திரா பௌர்ணமி மற்றும் பங்குனி உத்திரம், தை பூசம் முதலிய விழாக்களில் தேவேந்திரர்கள் ஒன்று கூடி பொங்கல் வைத்து அனைவருக்கும் தேவேந்திர குல வேளாளர் சங்கம் டில்லி என்று பேப்பர் பாக்கட்டில் போட்டு வழங்குங்கள். நாளடைவில் உங்களது பெயர் மண்டகபடியில் சேர்க்கும் நிலைக்கு தள்ளப்படும். இதை உணர்ந்து செயல்படுங்கள். முதலில் உணவு அளியுங்கள். பிறகு அனைவரும் நீங்கள் யார் என்ற வினா எழுப்புவார்கள். அப்போது உங்களது பெருமைமிக்க உழவுத் தொழில், அரச வாழ்வு, நமது முன்னோர்தான் பரமசிவன், பார்வதி, முருகன் என்று மெல்ல மெல்ல அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். இந்துக்கள் எனப்படுவோர் அனைவரும் நமது முன்னோர்களைத்தான் வணங்குகிறார்கள் என்ற உண்மையை உணர்த்திட நமது உயர்வு அதில் அடங்கும். அனைவரும் இதை செய்ய முன்வர வேண்டும் என்று எனது வேண்டுகோளை தெரிவிக்கிறேன். தஞ்சையில் நமது மாமன்னன் இராசராசன் பிறந்தநாள் சதய விழாவாக நாம் கலந்து கொண்டு செயல்படுகிறோம். எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நமது காரியம் நடைபெறுகிறது.

❁ ❁ ❁

# 2006 தேர்தலுக்குப் பின் தேவேந்திரர் நிலைப்பாடு

- பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்

2006 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து புதிய அமைச்சரவை கலைஞர் கருணாநிதி தலைமையில் பதவி ஏற்றுள்ளது. இந்த தேர்தலில் தேவேந்திரர் யார் யாருக்கு வாக்களித்துள்ளனர் என்பதை இந்து நாளிதழ்க் கருத்துக் கணிப்பு (9.5.2006) தேர்தலில் வாக்குப் பதிவு செய்து ஓட்டுச் சாவடியை விட்டு வெளியே வந்தவர்களிடம் கேட்டு வெளியிட்டுள்ளது. அதன்படி

49 சதவீதம் தேவேந்திரர் தி.மு.க. கூட்டணிக்கும்
25 சதவீதம் தேவேந்திரர் அ.தி.மு.க. கூட்டணிக்கும்
26 சதவீதம் தேவேந்திரர் மற்றவர்களுக்கும்

வாக்களித்துள்ளனர். அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்த தேவேந்திரர் போல் இரண்டு மடங்கு தேவேந்திரர்கள் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர். இந்த இரண்டு கூட்டணிகளுக்கும் வாக்களிக்காமல் மற்றவர்களுக்கு 26 சதவீத தேவேந்திரர்கள் வாக்களித்துள்ளனர்.

தேவேந்திரர்களின் அரசியல் கட்சிகளும் தேவேந்திரர் அமைப்புகளும் தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணிகளால் புறக்கணிக்கப்பட்டனர். தேவேந்திரர் கட்சிகளையும் சமூக அமைப்புகளும் இக்கூட்டணியினர் சேர்த்துக் கொள்ளவில்லை. இருந்தும் 74 சதவீதம் பேர்கள் இந்த இரண்டு கூட்டணிகளுக்கும் வாக்களித்துள்ளனர்.

தேவேந்திரர் கட்சிகளாக முனைவர் குருசாமி சித்தரின் அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகம், ஜான்பாண்டியனின் மக்கள் தமிழக முன்னேற்றக் கழகம், பசுபதி பாண்டியனின் மருத மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி கவிதாசனின் மக்கள் தமிழகம், துரை அரசனின் மக்கள் புதிய தமிழகம், தலித் கட்சியான கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் ஆகியனவும் தேவேந்திரர் சமூக அமைப்புகளான பலவும் தேவேந்திரர்களை அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெற வைக்க முயன்றனர். அவர்களின் முயற்சி தொடக்க கட்டத்திலேயே இருக்கின்றன என்பதைத் தான் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இத்தனை தேவேந்திரர்களின் அமைப்புகளை தேவேந்திர மக்கள் விரும்பவில்லை. ஓரணியில் எல்லா அமைப்புகளும் திரள வேண்டும் என விரும்புகிறார்கள்.

தேவேந்திரர்களின் பல அரசியல் மற்றும் சமூக அமைப்புகள் தேவேந்திரர்கள் சமூக ரீதியான அரசியல் ரீதியான படிப்பறிவை கொடுப்பதை முதன்மைப் படிப்பாக எடுத்து அவர்களுக்கு அறிவுரை கூறாமல் அவர்களுடைய சிறப்பை, உயர்வை, வரலாற்றை, பண்பாட்டை அவர்களுக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்பை, அவர்களுக்கும் தமிழர் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பை, அவர்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டாமல் தேவேந்திரர்களைத் தாழ்த்தப்பட்டவர் எனக் கூறியே அவர்களுடைய தன்னம்பிக்கையை அழித்தனர். அவர்களுடைய முன்னேற்றத்திற்கான முயற்சியைக் கெடுத்தனர். இது தவறு என்று தெரியாமலே இவர்கள் இதைச் செய்து வருகிறார்கள். இந்நிலை மாறி வருகிற காலங்களில் தேவேந்திரர் தமது உரிமைகளைப் பெறவும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தவும் மக்களிடம் நேரடியாக தேவேந்திரர்களின் தமிழர் நாகரிகத்திற்கான பங்களிப்பைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும்.

டாக்டர் கிருஷ்ணசாமி தான் தேவேந்திரர்களுக்காகப் பாடுபடுபவர், தேவேந்திரர்களின் பிரதிநிதி என்ற மாய போர்வையை கழற்றிவிட்டு தான் தலித்வாதி என்கிற தனது சுய தோற்றத்தைக் காட்டியுள்ளார். தனது கட்சியான புதிய தமிழகத்தைக் கலைத்து விட்டு மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியில் இணைய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். கடந்த 10 ஆண்டுகளாக தேவேந்திரர்களை ஏமாற்றி வந்து அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக இருந்த கிருஷ்ணசாமி தேவேந்திரர்களை விட்டுச் செல்வது தேவேந்திரர்களுக்கு நன்மை பயக்கும். தேவேந்திரர்கள் தங்களை மீண்டும் சரியாக அடையாளப்படுத்திக் கொள்ள வாய்ப்புகள் வரும்.

தேவேந்திரர்களும், தேவேந்திரர் அமைப்புகளும் தோல்வியில் சோர்ந்து போகாமல் மீண்டும் பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர் தலைமையில் உள்ள தேவேந்திர குல வேளாளர் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு ஒரு மாபெரும் சக்தியாக உருவாக வேண்டும். இச்சங்கத்தின் சமூகம் மற்றும் அரசியல் ரீதியாக ஒரு சில கொள்கைகள் வருமாறு.

1. பல ஆயிரம் ஆண்டுகள், அனைத்துத் தமிழர்களுக்கும் தலைவர்களாக, சேர, சோழ, பாண்டிய வேந்தர்களாக, மருதநிலத் தலைமக்களாக அனைவருக்கும் உணவளித்தவர்களாக, அறிஞர்களாக, புலவர்களாக அனைத்து மக்களுக்கும் அறிவு கற்பித்தவர்களாக, படைத் தலைவர்களாக, அரசர்களாக, போர் வீரர்களாக அனைத்துத் தமிழர்களையும் காப்பாற்ற வந்தவர்களாக, முருகனாக, சிவனாக, திருமாலாக, தேவேந்திரராக, பார்வதியாக அனைத்து மக்களும் போற்றி வணங்குபவர்களாக வாழ்ந்த தேவேந்திரர் அந்த வரலாறுகளை அறிந்து மீண்டும் அந்த உன்னத நிலைக்கு வரப் பாடுபடுதல்.

2. மள்ளர், பள்ளர், பண்ணாடி, பலகான், மூப்பன், வாய்காரர், பணிக்கர், குடும்பர், காலாடி முதலிய தேவேந்திர வம்சத்தைச் சேர்ந்த அனைவரையும் ஒட்டு மொத்தமாக தேவேந்திர குல வேளாளர் எனக் குறிப்பிட அரசியல் சட்டத்தைத் திருத்தி ஆணை பிறப்பிக்கச் செய்தல்.

3. தமிழர்களின் தலைமக்களான தேவேந்திர குல வேளாளர்களின் வரலாறுகளுக்கும் பண்பாடுகளுக்கும்

# சிறு தொழில் துறையின் சிறப்புகள்

- பேராசிரியர் ப. கனகசபாபதி

நமது தேசத்தின் தொழில் துறையில் சிறு தொழில் துறையானது அடிப்படையான பங்கு வகிக்கிறது. தொழில் முனைவோரை உருவாக்கும் களமாகவும் பல லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் இடமாகவும் விளங்குவது மட்டுமின்றி, நமது பொருளாதார உற்பத்தியிலும் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

சிறு தொழில் துறை பற்றிய சரியான விபரங்கள் இதுவரை நம்மிடம் முழுமையாக இல்லை. அதிலும் பல லட்சக்கணக்கான எண்ணிக்கையில் செயல்பட்டு வரும் பதிவு விபரங்கள் எதுவுமே இல்லை. இந்த சமயத்தில் மத்திய அரசின் அகில இந்திய அளவிலான சிறு தொழில் துறை பற்றிய மூன்றாவது கணக்கெடுப்பு கடைசியாக 2002-03ல் எடுக்கப்பட்டுள்ளது. 2001-02 ஆம் ஆண்டுக்கான விபரங்களை வைத்து எடுக்கப்பட்ட இந்த அறிக்கையில், முதல் முறையாக பதிவு செய்யப்படாத சிறு தொழில் அமைப்புகள் பற்றியும் மாதிரி அடிப்படையில் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது சுமார் பதின்மூன்று லட்சத்து எழுத்தைந்தாயிரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும், தொண்ணூற்று ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்படாத அமைப்புகளுமாகச் சேர்ந்து மொத்தம் ஒரு கோடியே ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுதொழில் அமைப்புகள் நாடு முழுவதும் இயங்கி வருகிறது. இதில் சிறு தொழில் நிறுவனங்கள், சிறு அளவிலான சேவை மற்றும் வியாபார அமைப்புகள் மற்றும் குறு நிறுவனங்கள் ஆகியன எல்லாம் அடங்கும். இவற்றில் சிறுதொழில் நிறுவனங்கள் மட்டும் சுமார் நாற்பத்து நான்கு லட்சத்து நாற்பத்து ஆறாயிரம். மீதி, சேவை மற்றும் வியாபார அமைப்புகள் உள்ளிட்ட வகைகளைச் சேர்ந்தவை.

இந்தத் துறை பற்றி வெளிவந்துள்ள விபரங்களை எல்லாம் பார்க்கும்போது அதன் சிறப்புகள் குறித்து வியப்பு அடையாமல் இருக்க முடியவில்லை. குறைந்த அளவு முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கும் தன்மையும், நிறைய பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் செயல்பாடும் நம்மில் பல பேருக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். ஆனால் இத்துறையில் காணப்படும் சமூக நீதி, இதில் பெண்கள் ஆற்றுகின்ற பங்கு, அதிகமாக வங்கிக் கடன் பாக்கி வைக்காமல் திறமாகச் செயல்படும் தன்மை, இத்துறை உருவாக்கும் பலவிதமான பொருட்களின் எண்ணிக்கை, பல நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் குறிப்பிட்ட இடங்களில் ஒன்றாகச் செயல்பட்டு தொழில் மையங்களாக விளங்கும் பண்பு, நாமெல்லாம் சாதாரணமானவையெனக் கருதுகிற பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் உற்பத்தி, செயல்பாடு மற்றும் ஏற்றுமதிகள் ஆகிய விபரங்கள் நம்மை ஆச்சரியப்பட வைக்கின்றன.

இத்துறையில் உள்ள மொத்த நிறுவனங்களில் 96 விழுக்காடு நிறுவனங்கள் தனி நபர் சார்ந்த தொழில் அமைப்புகளாகவும், கிட்டத்தட்ட 2 விழுக்காடு பங்குதாரர்கள் கொண்ட அமைப்புகளாகவும் செயல்படுகின்றன. கம்பெனி அமைப்புகளாக ஒரு விழுக்காட்டுக்கும் குறைவான நிறுவனங்களே உள்ளன. இதில் முக்கியமான விஷயம் என்னவெனில் 56 விழுக்காடு நிறுவனங்கள் பட்டியல் சாதிகள் மற்றும் மலைவாழ் மக்களாலும், பிற்படுத்தப்பட்ட மக்களாலும் நடத்தப்படுகின்றன என்பதாகும். இதில் பட்டியல் சாதிகள் மற்றும் மலைவாழ் மக்கள் மட்டுமே 15 விழுக்காடு அமைப்புகளை நடத்தி வருகின்றனர் என்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். மொத்தத்தில் சுமார் பத்து லட்சம் நிறுவனங்கள், அதாவது கிட்டத்தட்ட பத்து விழுக்காடு நிறுவனங்கள், பெண்களால்

---

முன்பக்கத் தொடர்ச்சி . . .

முரணாக அவர்களை செட்டியூல்டு சாதிகளில் சேர்த்ததை மாற்றி அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல்.

4. வருகிற தலைமுறைகளுக்கு தன்னம்பிக்கை யையும் உயர்வையும் கொடுத்து அவர்கள் அனைத்துத் துறைகளிலும் (கல்வி, தொழில், உற்பத்தி, வணிகம், தகவல் தொடர்பு, அறிவியல், அரசியல், சமூகம்) முன்னேறித் தலைவர்களாக வளர்வதற்கான செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செய்தல்.

தேவேந்திரர்கள் அனைவரும் ஒரே சமூக அமைப்பில் இணைந்து செயல்படுவது அனைவருக்கும் வலிமையைக் கொடுக்கும் என்பதை உணர்ந்து ஒன்று சேர்ந்து செயல்பட அழைக்கப்படுகிறார்கள். தன்னைச் சுற்றித்தான் இந்த சமூகம் வலம் வர வேண்டும் என்கிற ஈகோவை விடுத்து சமூகத்தை முன்னிறுத்தி உழைக்க அனைவரும் முன்வர வேண்டும். தமிழ்நாட்டில் தேவேந்திரர் 23 மாவட்டங்களில் ஒரு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்டவர்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்கிற எண்ணிக்கை வலிமையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேவேந்திரர் வரலாறு பற்றிய பல நூல்கள், சுமார் 30 இதுவரை வெளிவந்துள்ளன. அவைகளை தேவேந்திரர் தவறாது படித்தறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அது அவர்களை தன்னை உணர்ந்தவர்களாக, தன்னை அறிந்தவர்களாகச் செய்யும். ஒரு சமுதாயத்தின் விடுதலைப் போருக்கு அதன் வரலாறுகளும், பண்பாடுகளும், இலக்கியங்களுமே போர் ஆயுதங்கள் ஆகும் எனும் அறிஞர்களின் கூற்றை அறிந்து செயல்பட வேண்டும்.

❀ ❀ ❀

நடத்தப்படுபவை. மேலும் இத்துறை முப்பத்து மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

அனைத்து சிறு தொழில் அமைப்புகளும் சேர்ந்து சுமார் இரண்டரை கோடி மக்களுக்கு வேலை கொடுக்கின்றன. நமது நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக அதிக பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் துறை அநேகமாக இதுவாகத்தான் இருக்கும். சராசரியாக ஒவ்வொரு நிறுவனமும் 2.37 பேருக்கு வேலை கொடுக்கின்றது. இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சராசரியாக ஒன்றரை லட்ச ரூபாய் மட்டுமே நிலைத்த மூலதனமாக முதலீடு செய்கின்றன. அதிலும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் அறுபத்தெட்டாயிரம் ரூபாய் மட்டுமே இவ்வகை முதலீட்டை செய்கின்றன. ஆனால் இவற்றின் மொத்த சராசரி உற்பத்தி இரண்டு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாயாக உள்ளது. இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றும் சராசரியாக ஒரு லட்ச ரூபாய் முதலீட்டுக்கு 1.62 பேருக்கு வேலை கொடுக்கின்றன. இதிலும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் சராசரியாக மூன்று பேருக்கு வேலை கொடுக்கின்றன.

மொத்தத்தில் ஏழு விழுக்காடு நிறுவனங்கள் மட்டுமே கடன்களை பாக்கி வைத்திருக்கின்றன. அதிலும் நிதி நிறுவனங்களிடம் கடன்கள் வைத்திருப்பவை ஏறத்தாழ 4.6 விழுக்காடு நிறுவனங்கள் மட்டுமே. இவற்றிலும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மூன்று விழுக்காடு மட்டுமே. இதன் மூலம் சிறு தொழில் அமைப்புகள் நிதி நிறுவனங்களுக்கு அதிக நட்டம் ஏற்படுத்தாமல் செயல்படுகின்ற தன்மை நமக்குப் புரிகின்றது.

ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இந்த நிறுவனங்கள் பதினைந்தாயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் ஏற்றுமதியைச் செய்கின்றன. இவற்றில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும், நாற்பத்து மூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்படாத அமைப்புகளும் அடங்கும்.

## கலைஞர் கருணாநிதி - 84 பிறந்த நாள் வாழ்த்துக்கள்

3.6.2006 அன்று தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமது 84 - ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார். ஆயிரக்கணக்கான தொண்டர்களும், தலைவர்களும், கட்சியினரும் அரசு அதிகாரிகளும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

தேவேந்திர குல வேளாளர் சங்கமும், அனைத்திந்திய தமிழக முன்னேற்றக் கழகமும் பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தரும் தமது வாழ்த்துக்களை கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்து மகிழ்ச்சியடைகின்றனர்.

ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் சேவைகளில் ஈடுபடுவதிலும் ஈடுபட்டுள்ளன. நாடு முழுவதும் பல இடங்களிலும் இத்துறை பரவியுள்ளது. இருப்பினும் உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மஹாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களில் மட்டும் ஏறத்தாழ பாதியளவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் தமிழகத்தில் மட்டும் சுமார் ஏழு லட்சத்து எண்பதாயிரம் நிறுவனங்கள், அதாவது 7.5 விழுக்காடு.

சிறு தொழில் நிறுவனங்கள் காலத்துக்கு ஏற்றாற்போல் தங்களை மாற்றிக் கொள்ளத் துவங்கியிருப்பது நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விஷயமாகும். பதிவு செய்யப்பட்ட பிரிவில் பதினைந்து விழுக்காடு நிறுவனங்கள் தொழில்நுட்ப அறிவை வெளியிலிருந்து வாங்கி பயன்படுத்திக் கொண்டு வருகின்றன. இதில் சுமார் ஒரு விழுக்காடு நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து இந்த தொழில் நுட்பத்தை பெற்றுள்ளன. மேலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கணினியை வைத்து உபயோகப்படுத்தி வருகின்றன என்பது மற்றுமொரு செய்தி.

இந்தக் கணக்கெடுப்பில் இன்னொரு முக்கியமான விஷயம் சிறு தொழில் மையங்களைப் பற்றியதாகும். ஒரு குறிப்பிட்ட சுற்றளவுக்குள் பல நிறுவனங்கள் இருந்து கொண்டு, ஒரே விதமான பொருள் உற்பத்தியிலோ அல்லது ஒரே விதமான சேவையிலோ ஈடுபடும்போது, அத்தகு இடம் தொழில் மையம் என அழைக்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களைப் பொறுத்த வரையில் நூறுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அமைந்துள்ள மாவட்டங்களும், பதிவு செய்யப்படாத நிறுவனங்களைப் பொறுத்தவரை ஐநூறுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அமைந்துள்ள மாவட்டங்களும் தொழில் மையங்களாக இவ்வறிக்கையில் கருதப்பட்டுள்ளன.

அவ்வாறு பார்க்கும்போது பதிவு செய்யப்பட்ட, நிறுவனங்கள் அமைந்துள்ளதாக 223 மையங்களும், பதிவு செய்யப் பெறாத நிறுவனங்கள் உள்ளதாக 819 மையங்களும், ஆக மொத்தம் 2,042 மையங்கள் நமது தேசத்தில் உள்ளன. இந்த மையங்களின் முக்கியத்துவம் என்னவெனில், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் மூன்றில் ஒரு பங்கும், பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் முப்பத்தெட்டு விழுக்காடும் இங்குதான் உள்ளன. வேலை வாய்ப்பைப் பொறுத்த அளவில் இந்த மையங்கள் தான் முப்பது விழுக்காட்டுக்கும் மேல் வேலையை அளிக்கின்றன.

இம்மையங்கள் சிலவற்றிலுள்ள தொழில் அமைப்புகள் மற்றும் தொழில் செய்வோர்களின் எண்ணிக்கை நம்மைப் பிரமிக்க வைக்கிறது. உதாரணமாக சூரத் நகரில் செயல்படும் பதிவு செய்யப்பட்ட செயற்கை பட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை மட்டும் 7,631. ஒரிசாவில் மயூர்பஞ்ச்

மாவட்டத்தில் இலைத்தட்டு தொழிலில் மட்டும் சுமார் 62,000 அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. பதிவு செய்யப்படாத பிரிவில் தையல் தொழிலில் பிறருக்காக வேலை செய்து கொடுக்கும் பணியில் நாடு முழுவதும் ஈடுபட்டுள்ள அமைப்புகளின் எண்ணிக்கை சுமார் பதினைந்து லட்சம். இத்தொழிலில் ஈடபட்டுள்ள தையல் கலைஞர்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் இருபத்தாறு லட்சம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை மொத்தம் 159 சிறு தொழில் மையங்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது. இவற்றில் 61 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பல கோடி ரூபாய் மதிப்புள்ள உற்பத்தியை செய்து வருகின்றன. நாடு முழுவதுமுள்ள இந்த சிறு தொழில் மையங்களில் பல தேச அளவிலும், சில சர்வதேச அளவிலும் தரமான பொருட்களுக்காகவும் உற்பத்திக்காகவும் பெயர் பெற்றவையாகும். உதாரணமாக சிவகாசி பட்டாசுகளையும், திருப்பூர் பின்னலாடைகளையும் சொல்லலாம்.

இதற்குக் காரணம் தொழில் மையங்களில் உள்ள உறவு சார்ந்த தன்மை, அதனால் ஏற்படும் போட்டி, அதன் மூலம் உண்டாகும் உற்பத்தி, உந்துதல், தர மேம்பாடு ஆகியவையே ஆகும். இவ்வாறு உள்ளூரில் ஏற்படும் வளர்ச்சி, வாய்ப்புப் பெருகும்போது வெளிநாட்டிலும் நீண்டு, பின்னர் உலகச் சந்தையை ஆக்கிரமிக்கும் அளவு சென்று விடுகிறது. இதற்கு உதாரணமாக வைர வியாபாரத்தைச் சொல்லலாம். பல வருடங்களுக்கு முன்னர் சூரத்தில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழில், இன்று உலகச் சந்தையில் மூன்றில் இரண்டு பங்கு நமது தேசத்தவர்கள் வசம் உள்ளது.

இம்மையங்களைப் பொறுத்தவரை, அவை நாட்டின் பல பகுதிகளில் இருந்தாலும், அவற்றுக்கிடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ எல்லா மையங்களிலும், ஆரம்ப காலத்தில் தொழில் முனைப்பு கொண்ட சாதாரண மக்கள் சிலராலேயே தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. பின்னர் அப்பகுதி சார்ந்த மக்கள் அதிக அளவில் தொழில்களில் ஈடுபட்டு, அதன் மூலம் நிறைய எண்ணிக்கையில் நிறுவனங்கள் பெருகி, இன்று அவையெல்லாம் தொழில் மையங்களாகத் திகழ்கின்றன. மேலும் இம்மையங்களில் சிறியதாக பல வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களில் சில, இன்று வேகமாக வளர்ந்து பெரிய கம்பெனிகளாகவும் ஆகிவிட்டன.

ஏறத்தாழ இந்த மையங்கள் அனைத்துமே அரசை சார்ந்திருக்காமல், மக்களின் சொந்த முயற்சியால் ஏற்பட்டவை. மேலும் இந்த மையங்கள் வளர்ச்சி பெற்றபின், அதிலுள்ள தொழில் முனைவோர்கள் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியும், பிற முதலீடுகளைச் செய்தும், மேன்மேலும் அந்த மையங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளனர். இன்று நமது தேசத்தில் ஏற்பட்டுள்ள வேகமான பொருளாதார வளர்ச்சியில் உற்பத்தித் துறையும் சேவைத் துறையும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த துறைகளில் நமது தொழில் மையங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

இந்த அறிக்கையில் தெரிய வரும் வருத்தத்திற்குரிய விபரம் என்னவெனில், பதிவு செய்யப்பட்ட பிரிவில் மட்டும் 39 விழுக்காடு நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன என்பதாகும். இதற்கு முக்கிய காரணங்களாக போதிய அளவு சந்தையில் தேவை இல்லாததும், நடைமுறை மூலதனப் பற்றாக்குறையும், மார்க்கெட்டிங் பிரச்சினைகளும், மின்சாரப் பற்றாக்குறையும் தான் எனக் கண்டறியப்பட்டுள்ளன.

பல்வேறு கலாச்சாரப் பின்னணியைக் கொண்டு, நிறைய மக்கள் தொகையைக் கொண்ட நமது நாட்டில், சிறு தொழில்கள் ஆற்றி வரும் பங்கு மகத்தானது. இவை பற்றி நமக்குக் கிடைத்திருக்கின்ற விபரங்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது, இத்தொழில்கள் நமது பொருளாதாரத்துக்கும் சமூகத்துக்கும் ஆற்றி வரும் பங்கு குறித்தும், இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர்களின் அபாரமான திறமை குறித்தும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது.

**நன்றி : சுதேசி செய்தி, ஜூன் 2006**

❀ ❀ ❀

## கருணாநிதியின் தமிழ்நாடு அமைச்சரவையில் ஒரேயொரு தேவேந்திரர்

முப்பது அமைச்சர்களைக் கொண்ட கருணாநிதியின் அமைச்சரவையில் தமிழ்நாட்டு மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு உள்ள தேவேந்திர குல வேளாளர்க்கு ஒரேயொரு அமைச்சர் பதவி கொடுத்துள்ளார். அதுவும் ஆதி திராவிடர் நலத்துறை. சமயநல்லூர் தொகுதியில் வெற்றி பெற்று ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சராக உள்ள மாண்புமிகு தமிழரசி அவர்கள் தேவேந்திர குல வேளாளர் குடியைச் சேர்ந்தவர்கள்.

## புதிய தமிழகம் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியில் இணைகிறது

டாக்டர் க. கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் அகில இந்திய அளவில் உள்ள முன்னாள் உத்திரப் பிரதேச முதல்வர் மாயாவதியின் கட்சியான பகுஜன் சமாஜ் கட்சியில் இணைவது பற்றிய திட்டம் தீவிரப் பரிசீலனையில் உள்ளது என டாக்டர் கிருஷ்ணசாமி நிருபர்களுக்கு (24.5.2006) அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

தேசிய அளவில் தலித் அமைப்புகளை ஒருங்கிணைப்பதின் அவசியத்தை வலியுறுத்தினார். பட்டியல் சாதியினருக்கு தனித்த வாக்காளர் பட்டியல் வேண்டும் எனக் கூறினார்.

# செங்கோட்டுப் பள்ளு

சென்ற இதழ் தொடர்ச்சி:

மள்ளர் வயல்களில் களையெடுத்துப் பயிர் வளர்த்து நெல் அறுவடை செய்கின்றனர். கூலிக்கும், கோயில்களுக்கும் குடும்பனார் நெல்லளந்து கொடுக்கிறார். மூத்தமள்ளி தனக்குச் சரியான பங்கு தரப்படவில்லை எனச் சண்டைக்கு வருகிறார். மூத்தமள்ளி இளையமள்ளி இருவருக்கும் வாய்சண்டை சமயச்சண்டை ஆகிறது.

அத்தர்திரு நாகமலை ஐயர்பத மேபணிந்து
**சுத்தியும் நாற்றிசை தொழுது சுபமுகுர்த்த வேளைதனில்**
மத்தர் திரு வயலில் நின்று வளருங்களை யெடுத்தனரே
தத்தைமொழி மாதர்களை தானெடுத்து மருங்கில் நின்று 814

வேறு

வல்லியரை பார்த்து மிங்கே -- எல்லாம்
வாருங்கடி களைபறிப் போம்
மெல்லியர்எல் லோரும்வந்து -- பெண்காள்
மிகுந்தகளை தானெடுங் கோ
நல்லிப்பெண்ணே குமரமங்கைவாழ் - வளர்
நாச்சிமுத்தே திருமங்கைவாழ்
செல்லியம்மா ஏமப்பள்ளி
திருவாயி பெரியா யி 815

நஞ்சிநாரா யணிஅரிய
நாச்சிவடு காயிப்பெண்ணே
குஞ்சிதயி லாயிஇளங்
குமரிப்பெண்ணே நீங்களெல் லாம்
கொஞ்சிவிளை யாடிக்கொண்டே
கூடிநிறை யாய்நெருங் கி
இன்சொல்வயல் களைசுருக்காய்
எடுத்திடுங்கோ பள்ளிய ரே 816

கலிப்பா

மழைக்கால் நிறத்தழகர் மைத்துனனார் பண்ணைவயல்
களைக்கால் பறித்து நிற்கும் கன்னியரைக் கண்டவர்கள்
உளைக்கால் இறங்கினர்போல் உற்றுநின்றே மாறிநடை
தளைக்கால் எனநடந்து தான்தவித்து வாடுவரே 817

சிந்து

திங்களைப் பாத்திரம் படைத்து மே -- சிவ
சங்கம ரூபமொன் றெடுத்து மே
தில்லைக் குயவனை மிரட்டி னால் -- மிகு
வல்லடி வழக்குத் துறட்டி னால்
மங்கையர் தங்களைத் தீணடா விரத
பங்கம துசெய்த ஆண்டவர்
மானக்கஞ் சாறர்தன் மகள்மயிர்முடி
தானத்தை வேண்டிமுன் கொய்த வர்
பங்கய மாதுறை சயில னார் -- திருச்
செங்குவ டர்பண்ணை வயலி லே
பள்ளச் சிறுக்கியர் நாட்ட மாகவும்
**மள்ள** ருடன்திருக் கூட்ட மாய்
கொங்கையுங் கார்குழல் அலுங்க வே -- நல்ல
இங்கித பூஷணந் துலங்க வே
கொஞ்சி மொழிந்தவர் களைபறித்திடும்
ரஞ்சிதம் பாரடி பள்ளிய ரே 818

**நங்கை -- நாத்தி விளையாட்டு**

செங்குன்ற மேருவி லாதி யாய் - வளர்
சங்கர னார்சிவ சோதி யார்
சிந்தை மகிழ்பண்ணை வயலி லே -- பெண்கள்
வந்து களையெடுத் தொயில தாய்
நங்கையும் நாத்தியுங் கூடி யே -- பழித்
திங்கித மாய்விளை யாடி யே
நஞ்சிப்பெண் ணாள்கரை மீதி லே -- பிள்ளை
கொஞ்சிக் கொடுத்திடும் போதி லே
அங்கொரு மந்திவந் தருக வே -- முலை
செங்குறும் பையெனத் திரு கவே
அரிய நாச்சியுங் கூவி யே -- கல்லில்
எறிய வும்மரந் தாவி யே
மங்கையர் மீதினில் மாங்க னி -- பறித்
தங்கிட **மள்ளர்**வி ளாங்க னி
மந்தியின் மீதிலே எறிந்து மே -- மகிழ்
விந்தையைப் பாரடி பள்ளிய ரே 819

வில்லுப் பிரம்படி பொறுத்த வர் -- மிக
வல்லவர் வெண்கண்டங் கறுத்த வர்
வேணிச்செங் குன்றையர் வயலி லே -- பயிர்
ஆணியெ னுங்களை பறிக்கச் சே
கல்லிச்சின் னான்மகன் துடித்துப் போய் -- அந்தச்
செல்லி தாழ் வாய்க்கட்டைப் பிடித்து மே
கையில் பணத்தையும் வாங்கிக் கோ -- அல்குல்
பையைக் கொடுத்தென்னைத் தாங்கிக் கோ
வல்லிதழ்த் தேனையுங் குடிக்க வோ -- ரெண்டு
மல்லிகைச் செண்டையும் பிடிக்க வோ
வாலப் பெண்ணேயென்று பதைக்க வே -- கசு
மாலங் குடிக்கியென் றுதைக்கவே
பல்லையுங் கெஞ்சிமல் லாடி யே -- உந்தன்
முல்லை நகையிதழ் நாடி யே
பார்க்கி றேன்சுவை கிட்ட வாடியென்று
கேட்கி றான்பாரும் பள்ளிய ரே 820

உடைய வர்மழுப்படைய வர் -- புலி
உடையி னார்மதிச் சடையினார்
உறுப்பு ளார்பணி பொருப்பு ளார் -- பண்ணை
விருப்ப மாம்வயல் வரைப்பி லே
விடைய மாய்ப்பள்ளிப் படைகள் மதுகொண்
டடையத் துவளும் நடையு மாய்
வீழ்ந்தும் உத்தியில் சாய்ந்தும் கண்களை
சோர்ந்து மலாந்தண்ணாந்துமே
தொடையும் நெகிழ்ந்த உடையுங் கிடந்த

கிடையுங் கண்டந்தச் சடைய னும்
தூக்கிக் கால்களை நீக்கமுயன்று
பார்க்கப் பின்வந்து மூக்கனும்
மடையொன் றேரியின் கடையென் றே – கல்லி
தடையில் லாமல்சொல் லிடையிலே
மட்டியா ளைப்பெண்கள் தட்டியெழுப்பியே
திட்டுற தைப்பாரும் பள்ளியரே 821

வலுக்கொண் டெங்கணுங் கொலுக்கொண் டார் – திரு
வாக்கி னார்பதந் தூக்கி னார்
வயலி லேஒரு தயிலின்மனம்
வாட்டி மையலைப் பூட்டி யே
குலுக்கு றாள்நின்று அலுக்கு றாள் – முகம்
கோணுறாள் அங்கே நாணு றாள்
கோட்டு முலையைக் காட்டு றாள் – முத்தம்
கொறிக்கி றாள்சின்னஞ் சிறுக்கி தான்
சலுக்கென் றங்கனே பிலுக்கு றாள் – தலை
சாய்க்கி றாள்எனை யேய்க்கி றாள்
சகிக்கி லைகிட்ட ஐக்கிய மாய்வர
சாற்று றாள்எனைப் பார்த்துமே
கலுக்கென் றங்கணே துலுக்கு றாள் – சன்னை
காட்டு றாள்மெத்த வாட்டு றாள்
கறுத்த குமரிச் சிறுக்கி யால் – மெத்த
வருத்த மாகினேன் பள்ளிய ரே 822

கலிப்பா

பளையார் பணிக்குவடர் பண்ணைவயல் பள்ளியர்மின்
களையால் மதனன் களைக்கக் களைபறித்து
விளைவாம் வயல்திருத்தி விட்டபின்பு நெற்பயிரும்
தளையார் அரன்அருள்போல் சாலவளர்ந் தோங்கியதே 823

### 62. மள்ளர் பயிர்வளர்த்து அறுவடை செய்தல்

சிந்து

வளைந்து கிளைத்துத் தூரு கட்டியே – உமைபரிமள
வள்ளி நிறமெய் யாகியெட்டியே
எழுந்து வகுந்து கணுமுத் தேறியே – திவ்வியவாச
மெனவும் பருவ மேறித் தேறியே
குளுந்தென்றலில் சூல்மு திர்ந்துமே – புடைகளாகிக்
குறுத்து நீட்டிக் கதிர்செ றிந்துமே
செலுந் திருவெங்கும் பரவி யுலவவே – செந்நெலின்கதிர்
தேற விளைந்து தானு மிலங்கவே 824

இரவலர்க்குத விட இணங்கியே – தியாகமுதவும்
எழில்க ரங்கள் எனவ ணங்கியே
பரவும் நெற்பயிர் அனைத்தும் தாறுமேல் – கனம்பொறாமல்
பணிம லைதனைப் பணியு மாறுபோல்
விரவி நிலத்தில் படிந்து வீழவே – குடும்பன்பண்ணை
வேந்த ரிடத்தில் சென்று தாழவே
சிரமுங் கரமுங் குவித்துப் போற்றியே – நெற்கதிர்களும்
தேற விளைந்த தென்று சாற்றவே 825

சால வேமணம் பிரியந் தாக்கவே – பண்ணையாண்டவர்
தனது குடும்பன் முகத்தை நோக்கியே
"கால மேகூலி யாளைச் சேர்த்துமே – ஐயர் தன்வயல்
களையும் அறுபோ" என்னச் சாற்றியே
கோலுக் காரன் தனைய னுப்புறோம் – கங்கணம்வைத்துக்
கொண்டதிகச் செல விடாமலே
ஆல மாமிடற் றண்ணல் வயலெலாம் – அறுத்துக்களத்தில்
அடித்து ரேகை செய்யுமென்றனர் 826

நல்லது புத்தியென் றுலாவியே – பாடிசேர்ந்து
'ரா'வி டிந்தபின் ஆளைக்கூடியே
"நெல்ல றுக்கவா" என்று கூறவே – கூலியாளும்
நெருங்கி வயலில் வந்து சேரவே
வல்ல மைசெறி கோலுக் காரனும் – கங்கணத்துக்கு
வந்து யிருந்து அறுப்பு விடுத்தனர்
கல்லெ றிந்தவர்க் கருளை நல்கிடும் – கடவுள் பண்ணைக்
காரர் சொற்படி யாக இருந்தனர் 827

அறுசீர் விருத்தம்

தண்ணித்தா சனும்வ ராமல் தமதுதேர்க் கடவு றாமல்
பண்ணும்வா சுகிமே ரையர் பண்ணையின் வயல்க ளெல்லாம்
அண்ணிரு நூறாளாக ஆறிரு நாளாள் விட்டு
வண்ணமா யிரம்நெற் சாலி வயலெலாம் அறுப்பித் தாரே 828

**நெல்லடித்து ராசிகாணல்**

நொண்டிச் சிந்து

**நெல்லறுத்துகளம் சேர்த்தல்**

அறுத்தே அரிப்படுத் தி – பள்ளர்
ஐம்பது பேரிருந் துபமு தை
திரித்தே சுருட்டிவந்து – விட்டுச்
செந்நெல்லின் அரிதனைத் தாவிவைத்து
பருத்த சுமையென வும் – கட்டிப்
பள்ளர்கள் மீதில்எ டுத்துவைக் க
வருத்த முடன்கொடு போய் – களம்
வைத்து மறுபடி யுந்திரும் பி 829

திரும்பி யெடுத்தெடுத்தே – சுமை
சேரக் களம்வந்து சேர்த்தபின்பு
சுரும்பார் குழல் அணங் கார் – இளந்
தோகையர் நிரைநிரை யாகநின்று
கரும்பார் மொழிபகர்ந்து – கடைக்
கண்ணில் இளைஞர் தமைமிரட்டி
குரும்பை முலையலுங் க – நல்ல
கோலச் சரிகை வளைகுலுங்க 830

**மள்ளர் – மள்ளியர் கதிரடித்தல்**

நீங்காத ஆசைதரும் – பள்ள
நேரிழை மார்அரி தான்கொடுக் க
வாங்கியே பள்ளர்க ளும் – நல்ல
வன்மைய தாகத் தலையுதிர
ஓங்கி யடித்துத றிக் – களத்
தோரமாய் வைக்கலை யுங்குவித் து
தாங்காணும் நெல்லினி லே – விழும்
சங்காய மெல்லாம் அரித்தொடுத் து 831

**தலையுதிர் - ராசி நெல்**

பதர்போக வேதூற்றி – ராசி
பண்ணியுங் குப்பலெ னக்குவித் து

அதுவேளை யானபின்பு -- போர்
அடித்தநெல் ராசியொன் றாய்ச்சேர்த்து
விதமான நெல்களையும்-- ராசி
வெவ்வேற தாகவு மேகுவித்து
இதமான கோல்க ரன் -- கறி
யிட்டஞ்சு மட்டிகை தான்போட்டு 832

**நெல் அம்பாரத்திற்குக் காவல்**

பத்திர மாய்க் காக்க -- நூறு
பள்ளரைக் காவல் தாகவைத்து
கர்த்தரின் பண்ணையி லே -- கோலுக்
காரன் குடும்பன் இருவர்க ளும்
மெத்தென வேநடந்து -- பண்ணை
வேந்தரைக் கும்பிட்டு உங்களுட
உத்தர வின்படி யே -- செய்து
ஊழியர் நாங்களும் வந்தோமை யா 833

**பண்ணையார் நெற்களத்திற்கு வந்து ராசி பார்த்தல்**

அடியார்க்குப் புத்தியென் ன -- ஒரு
அப்பணையே சொல்லும் ஒப்பணையாய்
படியாளு மன்னவ னே -- என்னப்
பண்ணையினாரு மனமகிழ்ந் து
கடிதாக வேஅளந்து -- நெல்
களஞ்சியஞ் சேர்த்திட வேணுமென்று
வடிவான நாகவெற் பார் -- தனை
வாழ்த்தியும் நெற்களம் வந்தனரே 834

அறுசீர் விருத்தம்

மூன்றுபிள் ளைகளைக் கொன்று முன்வர விட்டு யாவும்
ஈன்றகண் ணுதலார் போகி யெனுமலை யாளர் ஏவத்
தோன்றுபண் ணையினார் ராசி சுற்றியே பார்த்து வந்து
கோன்றிருப் பண்ணை மேவும் குடும்பனைப் பார்த்துச் சொல்வார் 835

**63. ஆள்களுக்கு நெல் கொடுத்தல்**

**சிந்து**

**மள்ளர் பங்கு**

செங்குவ டார்பண்ணைக் காரர்மகிழ்ந்து -- பள்ளச்
சேனையுடன் குடும்பன் தனையழைத்து
உங்களுக் குள்ளசுயந் திரங்களெல் லாம் -- நீங்கள்
உள்ளபடி யேசொல்லும் உதவிடு வோம்
பங்குகளும் பிரித்துக் கொடுத்திடு வோம் -- என்று
பண்ணையினா ருஞ்சொல்லப் பள்ளனுஞ்சொல் வான்
எங்களையா தரிக்க வந்த அர சே -- கேளும்
எங்கள் சுயந்திரம்ள தார்த்தமாய்ச்சொல் வேன் 836

அஞ்சுமுழக் கயிற்றில்கட் டஞ்சுசுமை யே -- செய்க்கு
அஞ்சுமை யும்பண்ணைக் கட்டொன்றுமுண்டு
மிஞ்சும் ராசி பொதிக்கஞ்சு வல்லநெல்ல தும்
விடுதலை யடிராசி மேரையுமுண்டு
பிஞ்சிளநெல் லுங்கருக்கா யென்றும்ரா சி -- தனில்
பின்னுமுன்னுந் தள்ளுவது சிலதுண்டு
பஞ்சு பறந்திடும்நெல் சங்காயநெல் போரடிநெல்
பண்ணைநெல் பங்கிடும்நெல் சிலதுண்டு 837

**மள்ளியர் பங்கு**

பள்ளர்சுயந் திரங்களிது, பள்ளிமார்க ளுக் -- கும்
பரவுஞ் செயிக்குநாலு அரியதுண் டு
கள்ளுச்சாரா யத்துக்கு வள்ளநெல் லுஞ் -- செயிக்குக்
கண்டுங்கா ணாமல்கட்டுப் பிசைவதுண்டு
தெள்ளுமணிகள், தெறிமணிகள், ஒதுக்குநெல்,
செய்யுங்கூலி நெல், களைச் சுயந்திரநெல்
உள்ளபடி யிதென்றுபள் ளனுரைத்திட வும்
உடையவர் இவர் க்குள்ள சுயந்திரமும் 838

**பொலி பொலியென்று வாழ்த்தி அளந்தார் குடும்பனார்**

சரியாக வுங்கொடுத்து அவரவர் மனமது
தான்மகிழ்ந் திடச்செய்து தயவா கப்
பரிவுட னேராசிக்குப் பூவும்பொதித்து -- வள்ளம்
பாச்சி யளந்திடஅப் பணைகொடுத் தார்
புரிசடை யோனைப்போற்றிப் பொலிபொலி யென்றுவாழ்த்திப்
போட்டிரு சோடுவள்ளம் பாச்சியளந் தார்
வரிசையா கவும்ராசி வகைவகை யாய்அளந்து
வகைதொகை யானதெல்லாம் எழுதிவைத் தார் 839

**நெல் கணக்கு எழுதி வைத்தல்**

கலிப்பா

எழுதும் பிரமர்க் கிதுவென் றெழுதிடுவோன்
எழுதும் எழுத்தாய் எழுதா மறைப்பொருளாய்
எழுத அடங்கா எழில்படைத்த நாகவெற்பார்
எழுதுசெந் நெல்கணக்கு மேஎழுதி வைத்தனரே 840

**சதாசிவக் குடும்பனார் கோயில்களுக்கும்**
**மற்றவர்களுக்கும் நெல் அளத்தல்**

சிந்து

வைத்து மேபணி மாமலை மீதினில்
வஸ்து வாகவி ளங்கிடு தேவர்க்கு
நித்த மேவும் படித்தரத் திற்கும்
நியம பூசைநி வேத்தியத் துக்கும்
முத்துச் சம்பாமுன் னூறுச லகைநெல்
முன்ன மேதான் அனுப்பியே வைத்தார்
சுற்றி யுள்ளதெய் வங்கள்த மக்கும்
சுகந்த வல்லிப ரிமள வல்லி 841

ஈச னார்கயி லாசலிங் கேசர்க்
கிரண்டு நூறுச லகைய ளந்தார்
வாச மானம டங்கள்த மக்கும்
வகைக்கு நூறுச லகைய ளந்தார்
ஆச கர்பர தேசியர்க் கன்னம்
அளிக்க நூறுச லகைய ளந்தார்
நேச மாய்த்திரு வாலயந் தன்னில்
நிறைந்து ஊழியஞ் செய்பவ ருக்கும் 842

உன்ன தம்பல வாத்திய ஓசை
உலவு மாதர் கவிஞர் களுக்கும்
அன்னச் சம்பாவில் நூறு சலகை
ஐய மார்க்கொரு நூறு சலகை
மின்னல் சம்பா அளந்து கொடுத்து
மிகுந்த நெல்ரெண்டு லட்சஞ் சலகை

தன்னை நூறுக ளஞ்சிய மிட்டதில்
சாமி முத்திரை தானது மிட்டார் 843

நாட்டி லேஉள்ள பண்ணையந் தன்னிலும்
நாலு லட்சம்பொ திநெல்வருக
மாட்டி லேவைத்து நாட்டினில் உள்ளதெய்
வங்களுக் குக்கால் வாசி யனுப்பி
வீட்டி லேமச்சி ராயிர மாக்கி
மிகுந்த நெல்லும் பதனங்கள் செய்து
தாட்டி கஞ்செறி பண்ணையி னாரும்
தயவ தாகவும் வீற்றிருந் தாரே 844

### அறுசீர் விருத்தம்

வீற்றிருந் தடியார் பங்கில் விளங்குதென் நாக வெற்பார்(கு)
ஏற்றதோர் வயலுக் கெல்லாம் இனிவிதைத் திடுக என்றே
சாற்றிட வகைக்கு நூறு சலகைநெல் கோட்டை கட்டி
பார்த்தவர் பதனம் பண்ணி பண்ணையார் மகிழ்ந் திருந்தார் 845

### சிவகாமி மள்ளத்தியார் கணவன் மீது வழக்குத் தொடுத்தல்

கலிப்பா

கால்நடித்துத் தூக்கியுமால் கால்பிடித்துத் தூக்கியுந்தென்
பால்நிலைத்த நாகவெற்பில் பால்நிறத்தர் ஆகியும் செங்
கோல் நடத்தைங் கோலர்பண்ணைக் கோதையராம் மூத்தபள்ளி
மேல்வழக்காய் தன்கணவன் மேல்வழக்குக் கூறினளே 846

### 64. சிவகாமி மள்ளி தமக்குப் பங்கு சரிவரத் தரப்படவில்லை எனல்

சிந்து

"சின்னமுஞ் சிறுமைப்பட்ட பள்ளன்தனக் கு -- வஞ்சி
சிரங்கத்தா ளிட்டபொடி மாயமயக் கம்
இன்னமுந்தெ ளியிலைநான் என்னசெய்கு வேன் -- பாவி
ஏனெனையிப் படிமுட்ட வேசதிக்கு றாள்
அன்னவளோ பாவியென்று பார்த்தவர்க்கெ லாம் -- மெத்த
அவதூறு செய்யுறாளி தாரறிவார் கள்
என்னவிதி யெந்தனுக்குக் காலமுட்டவும் -- சண்டை
யேபிடித் திருக்கவெட்க மாகுதெனக்கு 847

நாட்டுக்குநா யகம்வீட்டுக் கென்னமோஎன் பார் -- அந்த
நடத்தை முழுவஞ்சனை தானிருக்கு தே
வீட்டுக்குள்ந டக்குஞ்சேதி யாரறிவார் கள் -- நானும்
வெளியில்வந் தாலோஇவள் பாவியென் கிறாள்
ஏட்டிக்கிப்போட் டியிவளை மேன்மை செய்கிறான் -- நான்
எத்தனைநாள் பார்த்துமனம் ஒறுத்திருப் பேன்
வாட்டென்மேல்செய் யுறாளென்று சாட்டு றான்குற்றம் -- இந்த
வல்லடிவ ழக்காரோடே சொல்லியாறு வேன் 848

முந்தாநா ளவள்முன்பினில் என்னையும் வைதான் -- இன்று
முறைநெல்லை யும்பிள்ளையார் அடிநெல்லை யும்
சொந்தமுடன் வாரியவள் கூடையிலிட் டான் -- என்
சுயந்திரநெல் தரஅவன் கையெழும்பா து
சந்த்ரசே கரநயினார் தன்னை யலட்டிப் -- பேய்த்
தண்ணிக்குவாங் கினநெல்சு மைபிசைந்த து
விந்தையாய் அரிமிதித்த நெல்கள் ஒதுக்கு -- நெல்
விடுதலை தெள்ளுமணி தெறிமணி நெல் 849

பண்ணைக்கட் டடித்தநெல்லும் போரடிநெல்லும் -- சரி
பங்கிட்டுப்ப கிர்ந்தெனக்குத் தந்திடா மல்
ஒண்ணிலுஞ் சரிவரக்கொ டுத்திடா மல் -- பள்ளன்
ஓரவஞ் சனைசெய்தான் பாருங்கள் எல் லாம்
பெண்ணும் ஆணும் பெற்றவர்கள் பார்த்துச் சொல்லுங் கோ -- ஆடு
பெருமைக்கடித் தொன்றைப்பிள்ளைக் குத்தந்தாற் போல்
மண்ணுங்கல்லுங் கலந்தநெல் பங்கிக்கொடுத் தான் -- பங்கு
வந்தநெல்லைப் பாருங்கடி பள்ளிமாரே 850

### 65. சக்களத்திகள் அபிராமியும் சிவகாமியும் வாய்ச்சண்டையிடல்

(இவ்வேசல் முழுவதும் அபிராமியும் சிவகாமியும் மாறிமாறிக் கூறுவது - இரண்டு இரண்டு வரிகள்)

என்னடிசெங் கோட்டுப்பள்ளி முண்டை முறையிட்டு -- நீயும்
எல்லவரு டனுஞ்சொல்லி என்னசெய்கு வாய் 851

செய்வதென்ன ஒன்றுமில்லை சலுகைக்காரி -- எல்லாம்
தெய்வம்பொது வாயிருக்குந் தெரிந்து கொள்ள டி 852

தெரிந்தண்டி சாடைசன்னை யாகப்பேசு றாய் -- இந்தத்
தில்லுமல்லு நடவாது நல்லதல்ல டி 853

அல்லடிகொண் டவன்பெலங் கொண்டுபேசு றாய் -- எனக்
கார்பெலந்த லைகீழாய்நின் றாண்மைபேசா தே 854

பேசாதேபோய் ஆண்டவர்க்குச் சாடிசொல்லி யே -- இன்னம்
பிடித்துன் புருஷனைக்குட் டையில்போட டி 855

போட்டவளும் நான் பிறகு மீட்டவளும் நான் -- செத்த
பொணமேஉனக் கென்னபெலன் உண்டு சொல்ல டி 856

சொல்வதென்ன சீசீயென்னப் பண்ணைக்கார னார் -- பின்
தொடர்ந்துதிரிந் தாயுனக்கு மானமில்லை யே 857

மானமொரு சாண்மத்தாளங் கைத்தாளமென -- மெத்த
வளைந்துகொக் கரவட்டி யாய்நிற்காத டி 858

நிற்கிறசீ ராய்நில்லடி எச்சுப்பேசா தே -- எல்லாம்
நீலியென்று னைச்சொன்னது நிசமாச்சு தே 859

நீலிபோல் வலியப்பள்ளன் தன்னைத்தொடர்ந் தே -- வந்த
நிலைமையிங் காரானாலுந் தானறியா ரோ 860

அறிவார் வழக்கிட்டுப் போராடி வந்தே னோ -- நல்ல
தாகட்டும் வெட்கத்தைவெளி யேண்டிவிடு றாய் 861

ஏண்டியொருத் திபுருஷ னுக்கிச்சைப் பட்டே - 'தொத்தி
யே'வந்த வளுக்குபின் இத்தனை யென்ன 862

என்னவுன்னைக் கொண்டவன்வந் தென்னையுங்கொண் டான் -- உனக்
கிளப்பமோ என்னையும்நீ யேசிக்காட்டு றாய் 863

ஏசிக்காட்ட வேண்டாமடி தூஷணக்காரி -- நானும்
ஈசரடி யாளென்றும தித்துப்பேச டி 864

பேசியேஉன் னாண்டவனைப் பெருமைபேசு றாய் -- என்ன
பெருமை சங்கரர்கொலைப் பேயனல்ல வோ 865

பேயினுங் கடைகெட்டபி சாசேயீச ரை -- நிந்தை
பேசாதேதோ ஷம்வலுத்தெண்ணின தாமடி 866

தொடரும் . . .

செங்கோட்டுப் பள்ளு

# உலகளவில் குறி வழிபாடு

ஹாட்டர் எம். வெஸ்ட்ராப்
தமிழில் : சு. கோதண்டராமன்

(குறி என்று லிங்க வழிபாட்டைக் கூறுவது தவறு. சங்க இலக்கியத்தில் கந்தழி வழிபாட்டைக் காண்கிறோம். கந்தழி என்பது கல்லில் செதுக்கப்பட்ட ஜோதி. கல்லில் ஜோதியை மூப்பட்டையாகச் செதுக்குவர். இதனைக் குறி வழிபாடு எனக் கூறுபவர்களுக்கு கந்தழி பற்றித் தெரியாது. இதனைக் குறி வழிபாடு என்று மேற்கத்தியவாதிகள் கூறுவது தவறு. அவர்கள் நாட்டில் அந்த வழிபாடு இருந்திருக்கலாம். தமிழ்நாட்டில் கந்தழி வழிபாடு என்பது கல்லில் செதுக்கப்பட்ட ஜோதியாகவே கருதப்பட்டது).

கட்டுரையாளர் மேலை நாடுகளில் பண்டைக் காலத்தில் இருந்த குறி வழிபாடு பற்றிய தகவல்களைத் திரட்டித் தந்துள்ளார்.

மனித மனம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக உள்ளது. பல்வேறு கால கட்டங்களிலும் மனித மனத்தின் செயல்பாடும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளது. எனவே, ஒரே மாதிரியான எண்ணங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் வெவ்வேறு நாட்டு மக்களிடையேயும் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக் கொள்ளாமலேயே தோன்றி வளர்ந்தன. இதற்கு உதாரணமாக, ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத வெவ்வேறு மக்கள் கூட்டத்தாரிடையே தோன்றி வளர்ந்த குறி வழிபாட்டு முறையைக் கூறலாம்.

இயற்கையைத் தொடர்ந்து கூர்ந்து கவனித்த முற்கால மனிதர்களின் மனதில் இயற்கையின் செயல்பாடுகள் மிக அழுத்தமான பதிவுகளை உண்டாக்கின.

விதையினுள் அடங்கியுள்ள சக்தியும், மண்ணினுள் அடங்கியுள்ள சக்தியும் உற்பத்தியின் இரு காரணங்களாக இருப்பது, மனித மனத்தை முற்காலத்தில் கவர்ந்திருக்க வேண்டும். பிராணிகள் உற்பத்தியிலும் இதே போல் ஒன்று ஆணும் மற்றது பெண்ணுமாக இரட்டைக் காரணி அமைப்பு இருப்பதை அவர்கள் ஒப்பிட்டிருக்க வேண்டும். இந்த அறிவு பல நாட்டு மக்களுக்கும் பிறரிடமிருந்து கற்க வேண்டிய அவசியம் இல்லாமல், தானே தோன்றியது என்பதில் ஐயம் இல்லை.

ஏனெனில், இயற்கையின் ஒரு பொருளோ, செயல்பாடோ எல்லா இன மக்களுக்கும் அவர்கள் எவ்வளவு தொலைவில் பிரிந்திருந்தாலும் ஒரே மாதிரியான எண்ணத்தைத் தோற்றுவிக்குமாறு மனித மனம் அமைந்துள்ளது.

ஆதி மனிதனுக்கு, இயற்கை என்பது வெறும் ஜடப்பொருள் அல்ல. மாறாக அவன் அதைத் தன்னைப் போல மன உணர்ச்சிகள், ஆசைகள், செயல்பாடுகள் கொண்டதாகத்தான் கருதினான். பூமியின் உற்பத்தி சக்தி ஆண் பெண் உறவு போல் அமைந்ததாக அவன் கருதியது இயல்பே. பண்டைய எழுத்தாளர்கள் பலரும் இதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

ப்ளூடார்க் கூறுகிறார் : பூமியினுள் உயிர்ச் சக்தியைச் செலுத்துவதால், ஆகாயம் தந்தையைப் போல் செயல்படுவதாகவும், பூமி அதை வளர்த்து ஆளாக்கும் தாய்போல் செயல்படுவதாகவும் மனிதனுக்குத் தோன்றியது.

பினீசியப் புராணப்படி, ஔரனாஸ் என்ற ஆகாயத் தெய்வம் கே என்ற பூமித் தெய்வத்தை மணந்து ஓசியானஸ், ஹைபெரான், அயாபிடஸ், க்ரோனோஸ் முதலிய தெய்வங்களைப் பெற்றதாம்.

கிரேக்க ரோமானியப் புராணங்களைத் தழுவி எழுதிய வர்ஜில் என்னும் கவிஞர், பூமியில் விளையும் பொருள் யாவும் ஜுபிடர் என்னும் ஆகாயத் தெய்வமும் ஜுனோ என்னும் பூமித் தெய்வமும் இணைந்ததால் உண்டானவை என்கிறார்.

சிவ புராணத்தில் சிவனின் கூற்றாக வருவது, பரம்பொருளிலிருந்து புருஷனும் பிரகிருதியும் உற்பத்திக்கான ஆண், பெண் சக்திகள் தோன்றின. அவர்களிடமிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றியது.

தஹீதி தீவினர், தாரோடை ஹீடுநு என்னும் ஆண் தெய்வமும் தெபாபா என்னும் பெண் தெய்வமும் இணைவதாலேயே பிரபஞ்சப் பொருள்களும், நாட்களும், மாதங்களும் உண்டாகின்றன என்று கருதினர்.

நியுஜிலாந்தின் புராணப்படி, மேலிருந்து நம்மைக் காக்கும் ரங்கி என்னும் ஆகாயத் தந்தையும் பப்பா என்னும் பூமித்தாயும் இணைந்துதான் உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் உற்பத்தி ஆயின.

மத்திய அமெரிக்கச் செவ்விந்தியரின் நம்பிக்கை இது - பாமகோஸ்டாட் என்னும் தந்தைக் கடவுளும் சிபாலடோனல் என்னும் தாய்க் கடவுளும் இணைந்து ஆகாயத்தையும் பூமியையும் மனிதரையும் பிற பொருள்களையும் படைத்தனர்.

எகிப்தில் உற்பத்திக்கான ஆண் தெய்வம் கெம் தந்தை என்று அழைக்கப்படுகிறது. மாட் என்னும் பெண் தெய்வம் தாய் எனக் கருதப்படுகிறது. கெம் மனித உற்பத்திக்கு மட்டுமல்ல, தாவர உற்பத்திக்கும் பொறுப்பானவர். அவரது சிலையில் மரங்களும் செடிகளும் காணப்படுகின்றன.

அசிரியர்களிடையே பெல் எனப்படும் ஆண் தெய்வமும் மைலிட்டா எனப்படும் பெண் தெய்வமும் இயற்கையின் உற்பத்திச் சக்தியின் பிரதிநியாக விளங்கின.

குறிகள் இயற்கையின் உற்பத்திச் சக்தியின் அடையாளமாகக் கருதப்பட்டதால் அவை எல்லா நாடுகளிலும் மிகவும் மரியாதையுடன் வணங்கப்பட்டன.

அசிரியாவில், வுல் எனப்பட்ட ஆகாயத் தெய்வம் குறி வடிவில் வணங்கப்பட்டது.

ரோமில் லிபர் என்னம் தெய்வத்தின் கோவிலில் ஆண் குறியும், லிபேரா என்ற பெண் தெய்வத்தின் கோயிலில் பெண் குறியும் வணங்கப்பட்டதாக செயிண்ட் அகஸ்டின் என்பார் கூறுகிறார்.

பண்டைய ரோமில் ஏப்ரல் மாதத்தில், வீனஸ் தெய்வத்துக்கு விழா நடத்தப்பட்டது. அப்பொழுது பெண்கள் முன் செல்ல, ஒரு குறி வடிவம் வண்டியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, வீனஸ் கோயிலில் இருந்த பெண் குறி வடிவத்தோடு இணைக்கப்பட்டது.

யூதர்களிடையேயும் இது இருந்தது. விவிலியம் பழைய ஏற்பாடு, எசக்கியல் 16-17-1 பகுதியிலிருந்து, அக்காலப் பெண்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் குறிகள் செய்ததை அறிகிறோம்.

இந்தியாவில் லிங்கத்தை இந்துக்கள் வணங்கினர். இன்றும் வணங்குகின்றனர். கிரேக்கர்களும் ப்ரியாபஸ் என்ற பெயரில் குறி வழிபாடு செய்தனர்.

ட்யூட்டன்கள் மற்றும் ஸ்காண்டிநேவியர்கள், ப்ரிக்கோ என்னும் தங்கள் கடவுளை குறி அடையாளத்தின் கீழ் வைத்து வணங்கினர். ஹோர்ட்டேன்ஸ் எனப்படும் ஸ்பானிய தெய்வமும் அவ்வாறே வணங்கப்பட்டது.

மெக்ஸிகோவின் யுகடன் பகுதியில் இருந்த கோயிலுக்கு முன்னால் நிறுவப்பட்டிருந்த செங்குத்தான தூண் ஒரு குறிச் சின்னமே என்று ஸ்டீபன்ஸ் என்னும் அறிஞர் கருதுகிறார்.

மெக்ஸிகோவின் பனுகோ பகுதியில் குறி வடிவத்தைக் கோவிலில் வைத்து வழிபட்டனர். அங்கு ட்லாஸ்கலா என்னும் இடத்தில் இருவகைக் குறிகளும் வணங்கப்பட்டன.

பெரு நாட்டில் களி மண்ணால் செய்யப்பட்ட குறிகள் கிடைக்கின்றன.

ஹைட்டியில் அதன் பூர்வீகக் குடிகள் பயன்படுத்திய குறிச் சின்னங்கள் கிடைக்கின்றன.

மரியான் என்னும் பசிபிக் தீவில், அலங்கரிக்கப்பட்ட குறிச் சின்னம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதாக அறிகிறோம். அதற்கு அவர்கள் வைத்த பெயர் டினாஸ்.

விவசாயம் செய்து தானியங்களை விளைவிப்பது போல மக்களை உற்பத்தி செய்வதும் ஒரு புனிதக் கடமையாகக் கருதப்பட்டது.

ஜேம்ஸ் குக் தன் முதல் பயணம் பற்றிக் கூறுகையில், உலகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து விலகி உள்ள நியுஜிலாந்து அருகிலுள்ள ஒரு தீவில், வழிபாட்டின் ஒரு பகுதியாக, ஓர் இளைஞன் ஓர் இளம் பெண்ணுடன் பலர் முன்னிலையில் உடலுறவு கொண்டதைக் குறிப்பிடுகிறார். கூடி இருந்த உயர்குலப் பெண்கள் உள்பட அனைவரும் அதை அநாகரிகமாகக் கருதாதது மட்டுமல்ல, அதை மிகவும் பக்தி சிரத்தையுடன் நோக்கினர் என்றும் வியந்து கூறுகிறார்.

விவிலியம் பழைய ஏற்பாட்டில் ஜெனிஸிஸ் என்னும் பகுதியில், அப்ரகாம் தன் வேலைக்காரனைச் சத்தியம் செய்யக் கட்டளை இட்டபோது குறியின் மீது கை வைத்து சத்தியம் செய்யச் சொன்னார் என்று கூறப்பட்டுள்ளது. (தற்போதைய பதிப்புகளில் தொடை மீது என்று மாற்றப்பட்டது).

ஜேக்கப் என்பவர் தான் இறக்கும்போது, தன் மகனைச் சத்தியம் செய்யச் சொல்லும் போதும் அவ்வாறே கூறுகிறார். இந்த வழக்கம் இன்றும் அராபியரிடையே காணப்படுகிறது.

ஒரு நாகரிகம் வீழ்ச்சி அடையும் போதுதான் பிறப்புறுப்புகளைப் பற்றிப் பேசுதலும் வணங்குதலும் அநாகரிகமாகக் கருதப்படத் தொடங்கியது.

ரோமானியரின் பல கடவுள் வழிபாடு பற்றி எழுதிய கான்ஸ்டன் கூறுகிறார், அநாகரிகமாக இன்று நாம் கருதும் பழக்க வழக்கங்களை மனதில் கபடம் இல்லாமல், முன்னோர் கைக் கொண்டிருந்தனர். ஆனால், நம்பிக்கை குறைந்தபோது தான் அவை நாகரிகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயின.

வால்டேர் கூறுகிறார், நாகரிகம் அநாகரிகம் பற்றி இன்று நாம் கொண்டிருக்கும் கருத்துக்களின் காரணமாக, கிரேக்கர்களின் ப்ரியாபஸ் வழிபாடு இழிவான காமச்சுவை கொண்டதாகத் தோன்றினாலும், இழிசுவைகள் சமயச் சடங்குகளாக ஆகும் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. மாறாக, எளிய வாழ்க்கை வாழ்ந்த மக்கள் உயிரின் அடையாளத்துக்கு முதல் வணக்கம் செலுத்த வேண்டும் என்று கருதியது நியாயமானதே.

நாகரிகம் வளர்ந்து கல்வி முறைகள் மாறியபின், அவை மக்கள் மனதில் இழிவான காம உணர்வுகளைத் தூண்டின.

இதன் வளர்ச்சியில் மூன்று நிலைகளைக் காணலாம். முதலில் குறி வணக்கத்துக்குரிய பொருளாகக் கருதப்பட்டது. பின்னர் கண்ணேறு முதலான கோளாறுகளிலிருந்து காப்பாற்றும் தாயத்தாகக் கருதப்பட்டது. அலாட்ரி, பம்பேய் ஆகிய இடங்களில் உள்ள வாயிற் கதவுகளில், எகிப்தில் காணப்படும் பீங்கான் தாயத்துகளில் இவற்றைக் காணலாம். மூன்றாம் நிலையில் மனிதர் தரம் தாழ்ந்த பின், இழிந்த காமச் சின்னமாகக் கருதப்பட்டது. எனவே குறி குழந்தைப் பேற்றின் சின்னமாக, வளத்தின் சின்னமாகக் கருதப்பட்டது.

பம்பேயில் பிள்ளை வரம் வேண்டுவோர், குறிச் சின்னங்களைக் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தினர்.

நேபிள்ஸ் அருகில் இசர்னியாவில் சமீபகாலம் வரை இந்தப் பழக்கம் இருந்தது.

பீகிங்கில் புத்தர் கோவிலிலும் இம்மாதிரிக் காணிக்கைகள் அளிக்கப்பட்டன.

இந்தியாவில் திருமணமாகாத பெண்கள் கணவனை வேண்டியும், மணமானவர்கள் குழந்தையை வேண்டியும் சிவனை வணங்குதல் மரபு.

16 - ஆம் நூற்றாண்டில் பிரான்ஸில் செயிண்ட் பௌடின் ஆலயத்திலும், பெல்ஜியத்தில் செயிண்ட் டெர்ஸ் ஆலயத்திலும் சென்ற நூற்றாண்டில் நேபிள்ஸ் அருகில் செயிண்ட் காஸ்மோ, செயிண்ட் டமியானோ ஆலயங்களிலும் பெண்கள் இதுபோல் வழிபட்டனர்.

எகிப்தில் எக்மிம் நகர மக்கள் முற்கால உற்பத்தித் தெய்வமான பான் கோவிலுக்கு இருந்த அதே மக்கட்பேறு அளிக்கும் சக்தி தற்காலத்தில் ஷேக் சமாதியிலுள்ள ஒரு கல்லுக்கு இருப்பதாக நம்பி வழிபடுகின்றனர் என்று கார்டனர் வில்கின்ஸன் கூறுகிறார்.

கேப்டன் பர்ட்டன் கூறுகிறார், எல்லாப் பழங்கால மக்களுக்கும் முதல் தேவை குழந்தை. எனவே, எல்லா நாடுகளிலும் குறி வழிபாடு குறைவாகவோ மிகுதியாகவோ காணப்பட்டது. மத்திய அமெரிக்காவின் டஹோமா நகரில் இது பெருமளவில் இருந்தது. தலைநகரில் ஒவ்வொரு தெருவையும் குறிச் சின்னங்களைக் கொண்டு அலங்கரித்தனர். பழைய சின்னங்களை அவர்கள் நீக்குவதில்லை. அங்கு வணங்கப்பட்ட குறி ஒரு களிமண் உருவம். இது எண்ணெய் அபிஷேகம் செய்யப்பட்டு, எண்ணெய் கீழே உள்ள ஒ ரு பாத்திரத்தில் சொட்டிக் கொண்டிருந்தது. பிள்ளை வரம் வேண்டுவோர் அதன் முன் நின்று லெக்பா தெய்வமே, எங்களுக்கு வரமருள்க என்று வேண்டினர்.

**நன்றி : ஓம் சக்தி - ஜூன் 2006**

❁ ❁ ❁

# வேலன்பட்டி செப்பேடு

## பாளையப்பட்டு நாயக்கன் தேவேந்திரர் நிலங்களைப் பிடுங்கி அன்னதான மடத்திற்கு கொடுத்தது – கி.பி. 1648

தமிழகச் செப்பேடுகள் - தொகுதி - 1 (தமிழ்நாடு தொல்லியல் துறையின் வெளியீடு எண் 157) 2005 வெளியிடப்பட்ட நூலில் உள்ள செப்பேடு செய்தி.

தொல்லியல் துறை திருச்சிராப்பள்ளி பதிவு அலுவலர் ஸ்ரீதரன் மூலம் பெறப்பட்டு சென்னை கல்வெட்டாய்வாளர் சி. இராமச்சந்திரனால் படிக்கப்பட்ட செப்பேடு. இச்செப்பேடு கி.பி. 1648 ஆண்டைச் சேர்ந்தது. நத்தம் பாளையப்பட்டு முத்துலிங்கய நாயக்கன் வேலன் பட்டியில் அன்னதான மடம் அமைத்து அதன் செலவுக்காக, தேவேந்திரர்களுக்கு பூதக்குடி கிராமம் பள்ளபட்டியில் பாத்தியப்பட்ட குளம் மற்றும் நிலங்களைப் பறித்து, மடத்திற்கு எழுதி வைத்ததை காட்டும் செப்பேடு ஆகும். மள்ளர் பள்ளராக்கப்பட்டு மள்ளர் வசிக்கும் ஊர் பள்ளபட்டி எனப்பட்டது. இதில் அடங்கிய நஞ்செய் நிலம் செய் 20-ம் புஞ்செய் நிலம் 19 கலம் விதைப்பாடு அளவும் கொண்டது. தேவேந்திரர்களிடமிருந்து பறித்து சூலக்கல் (எல்லைக் கற்கள்) நட்டு அன்னதான மடத்திற்கு அளிக்கப்பட்டது என்று கூறுகிறது இச்செப்பேடு.

**செப்பேடு வாசகம் :**

**முன்பக்கம்**

1. அன்னதான மடம் தற்மத்துக்கு
2. த(ா)* ம்பிற சாதன பட்டையம் உ சொஷ்
3. த்த ஸ்ரீ சாலிவாகன சகாற்த்தம் சூரு௱
4. எ௰க கலியத்தம் சசூள௱ரு௰ இதின்
5. மேல்ச் செல்லா நின்ற விரோதி
6. காற்த்திகை மீ௳ ரு உ சோம வாரமு
7. ம் திறிதிகையும் மூலா நஷ்செத்
8. திரமு(ம்) கூடிய சுபதினத்தில் யாத
9. வ கோத்திரோற்ப்பவராகிய தொ
10. ந்திலிங்கய நாயக்கரவர்கள் புத்
11. திரன் முத்திலிங்கய நாயக்கரய்
12. யனவர்கள் வேலன்பட்டி அன்ன
13. தான மட தற்மசாதனம் பண்ணி வி
14. ச்சபடி சாதனமாவது பூதகுடிக்கி
15. றாமம் பள்ளபட்டி பனங்குடிக் குள
16. ம் இந்த நஞ்சை புஞ்சை எல்லை
17. க்கு விபரம் பூதகுடி மலை நாளிக்க

(பள்ளபட்டி தேவேந்திரர் நிலங்கள் பறிக்கப்பட்டு மடத்திற்கு தானம்)

18. ல் காயத்திக் கருங்கல்ப்பாரை இறக்க
19. த்தில் இசானிய மூலைக் கட்டுக்கால்
20. உசிலைமரம் அக்கினி மூலையில் கொ
21. ங்கான்னை வடகரை நிருதிமூலை
22. யில் ஆத்தோரத்தில் கொப்பைய
23. ம்பட்டி எல்லை ஆத்திமரம் வாய்வு
24. மூலைக் குளத்துள்வாய் வேப்பமரம்
25. இந்த நான்கு எல்லைக் குள்ளிட்ட

**பின் பக்கம்**

26. சூலக் கல்ப் பத்தொன்பதுக்குள்
27. சேற்ந்த நஞ்சை புஞ்சையில் ே
28. தவதாயம் விறமதாயம் மட தற்ம
29. ம் நீங்கலாக புஞ்சை விரை ௰௲
30. ௱ . . . ரு உ நஞைசை செய் உ௰௳
31. இதில்ச் சேற்ந்த அஷ்ட்ட போக
32. தேச சுவாமியங்கழுடன் ஆஷ்
33. சந்திராற்கக ஷ்தாகியாக தற்மப
34. ரிபாலனம் பண்ணின பேறக்
35. கு அஷ்சுமேதயாக பலன் விக
36. ாதம் பண்ணின பேர் கெங்கை
37. க்கரையில்க் கராம் பசுவை இ
38. ம்சை பண்ணின பலன் உ

❁ ❁ ❁

# அன்புள்ள ஆசிரியருக்கு

பாவை. நடவரசன், 29.5.2006
8, மண்டபத் தெரு, ஈரோடு - 1. உள, விடை கரு

அன்புடையீர்,

வணக்கம். வாழிய நலனே! மள்ளர் மலரில் (மே 2006) சங்க கால நடுகற்கள் பற்றியும் புதிய கற்காலக் கல்கோடாரியைப் பற்றியும் படித்தேன். பைந்தமிழர் தம் தொன்மையான வரலாற்றுச் சான்றுகளாக, அவை இருப்பதை உணர்ந்து, மகிழ்வும் பெருமிதமும் கொண்டேன்.

தொல்காப்பியத்திலும், புறநானூற்றிலும், அகநானூற்றிலும் நடுகற்களைப் பற்றிப் படித்திருக்கிறேன். அவை உண்மை என்பதை கல்கோடாரியும் நடுகல்லும் இருப்பதை, எளிய நடையில் விளக்கியிருக்கிறது. மள்ளர் மலர் பாராட்டக் கூடிய படைப்புகள் அவை.

நடுகல்லைப் பழந்தமிழர் தெய்வமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள். புறநானூற்றில் நடுகல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு வந்ததைப் பாருங்கள்.

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்ததெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே
(புறம் 335 : 9-12)

வீரனை வழிபடுவதை விட நெல்லைத் தூவி வழிபடும் கடவுள் வேறொன்று இல்லை என்கிறது. நம்மையும் நாட்டையும் பாதுகாக்கும் வீரனே, கடவுள் ஆகும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

நீண்ட நெடுங்காலமாகப் பழந்தமிழரிடம் இந்தப் பழக்கம் நடுகல் வழிபாட்டு முறை இருந்து வந்திருக்கிறது. அதனால்தான் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் நடுகல் நடுவதற்கும் இலக்கணம் வகுத்திருக்கிறார்.

காட்சி கால்கோள், நீர்ப்படை, நடுதல்,
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை, வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட வெழுமூன்று துறைத்தே
(தொல்காப்பியம்)

நடுகல்லைத் தேர்ந்தெடுத்தல் (காட்சி), கல்லை எடுத்து வருதல் (கால்கோள்), நன்னீரில் கழுவுதல் (நீர்ப்படை), கல்லை நடுதல் (நடுதல்), கல்லில் வீரனின் பீடும் பெயரும் உருவமும் பொறித்தல் (சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை), வாழ்த்தி வழிபடுதல் (வாழ்த்தல்) - இந்த ஆறு வகையான நிகழ்ச்சிகளும் நடுகல் விழாவின் நிகழ்ச்சிகளாகத் தொல்காப்பியம் வகைப்படுத்திக் கூறியிருக்கிறது. இவற்றைப் படிக்கின்ற பொழுது சித்திரச் சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குச் சிலையெடுக்க எண்ணி, இமயம் சென்றதும், கனகவிசயன் தலையில் கல்லேற்றி, கங்கையில் கழுவி, தமிழகத்தில் அமைத்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குவதைப் பார்க்க முடிகிறது.

புதிய கற்காலக் கல்கோடாரியிலுள்ள நான்கு எழுத்துகளும் முருகன் என்பவனைப் போர்க்கடவுளாகக் காட்டுகின்றன. முருகனைப் பற்றி ஆற்றுப்படை பாடிய நக்கீரர் கூட, முருகனை திருமுருகாற்றுப்படையில் அறிமுகப்படுத்தும் பொழுது ஓர் உயர்ந்த போர்ப்படை தலைவனாகவே வர்ணித்துக் காட்டுகிறார். அதனால், இன்றைக்குப் பழனி முருகன் ஆனாலும் பழமுதிர்சோலை முருகன் ஆனாலும், அவனும் ஒரு வீரனே என்பதை நினைக்கவும், போற்றவும் செய்வது சிறப்பானவையே ஆகும்.

கல்கோடாரியிலுள்ள எழுத்துகளும் நடுகல்லிலுள்ள எழுத்துகளும், சிந்து சமவெளி எழுத்துகளும் ஒன்றென்பதாலும் அதுவும் தமிழ்ப் பிராமி எழுத்து என்பதாலும் ஓர் உண்மை புலப்படுகிறது. உலகில் தோன்றிய முதன்மொழி, தமிழே என்பதாகும். முதன் மாந்தன் தமிழனே என்பதை அதன் மூலம் அறிய முடிகிறது.

மள்ளர் மலர், இப்படிக் காலக் கண்ணாடியைப் போலுள்ள கட்டுரைகளை மேன்மேலும் வெளியிட வேண்டும்.

தோழமையுடன்,
பாவை. நடவரசன்

❊ ❊ ❊

ச. நாத்திக நந்தனார் 23.5.06
ஒட்டேரி - வண்டலூர், சென்னை - 600 048.
(உயிரியல் பூங்கா எதிரில்)

மதிப்புயர் அய்யா வணக்கம்! மே இதழ் மள்ளர் மலர் பெற்றேன். நன்றி! புதிய ஆட்சி செய்ய வேண்டிய நல்ல பணிகளை மிகச் சரியாக கூறியுள்ளீர்கள் பாராட்டுகின்றேன்! தோன்றியுள்ள அரசு இலவசங்களை மறந்துவிட்டு நீங்கள் கூறிய ஆக்கப்பூர்வமான நல்ல பணிகளை திட்டமிட்டு நன்கு செய்ய வேண்டும். ஆட்சிக்கு வந்த பின் நல் அறிஞர்களின் நல்ல யோசனைகளை அரசு கேட்கும் தன்மை வர வேண்டும். அறிஞர்களின் நல்கருத்துக்கள் இடம்பெறும் நல் இதழ்களை ஆட்சியாளர் படிக்க வேண்டும். தங்களுக்குத்தான் எல்லாம் என்று ஆளுவோர்கள் நடக்கக் கூடாது அது தவறு! மக்களுக்கு சரியானவை சரியானபடி நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆட்சியை மாற்றியமைத்துள்ளார்கள். கிடைத்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆளும் அரசு மள்ளர் மலரில் காணப்பெறும்

அறிவான நல்கருத்துக்களை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும். அதுதான் மக்களுக்கும், ஆட்சிக்கும் மிக நல்லது.

தமிழ் - தமிழர் இயக்கம்
ச. நாத்திக நந்தனார்

❊ ❊ ❊

**வீர. பெருமாள்** 18.5.06
ஆசிரியர் - தன்மானக்குரல், 11/1, காவேரி நகர்,
இராமநாதபுரம், கோவை - 641 045.

ஐயா, வணக்கம். தங்கள் இதழ் மே - 2006ல் தீட்டப்பட்டுள்ள தலையங்கத்தில் தமிழீலச் சிக்கலில் இந்த அரசு தமிழர்களுக்கு ஆதரவான நிலையை எடுக்க வேண்டும் என கூறியிருப்பது பாராட்டுக்குரியதே! தொடங்கி வைத்துள்ளீர்கள், இனி எல்லோரும் தொடர்வார்கள் - இதழாழர்கள் நன்றி!

அன்புரிமையுடன்
வீர. பெருமாள்

❊ ❊ ❊

**தங்க சங்கர பாண்டியன்** 23.5.06
71/1-அ11, மணலிப்புதுநகர்,
சென்னை - 600 103.

அன்புடையீர், வணக்கம்.

மள்ளர் மலர் மே 2006 இதழ் கண்டேன். சங்க காலத் தமிழகம் கல்வியிற் சிறந்திருந்தது. 2300 ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டு என்ற கட்டுரை மிகவும் பயனுள்ள பல தகவல்களைத் தந்தது. புலவர் த. சுந்தரராசன் எழுதிய தமிழுணர்வும் அரசியல் நிலைப்பாடும் என்ற எழுத்தோவியம் பல வரலாற்றுச் செய்திகளை எடுத்துரைத்தது பாராட்டத்தக்கதாகும். மொர்வின் எழுதிய உறுதி தருவது கொள்கை என்ற அற்புதமான படைப்பு கொள்கைகளில் நாம் கடைபிடிக்க வேண்டிய உறுதிப்பாடுகளைச் சுட்டிக் காட்டியது மிகவும் அருமை. தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற பாவேந்தரின் பாட்டு வரியை உயிர்மூச்சாய்க் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் மள்ளர் மலரின் பணிகள் வெற்றி பெறுவதாக வாழ்த்துக்கள்.

தங்க சங்கர பாண்டியன்

❊ ❊ ❊

## அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் தமிழ்நாடு அரசு ஆணை

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் எல்லாச் சாதிகளைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக அமர்த்தப்படுவார்கள் என அரசு ஆணையிட்டுள்ளது. இது வரை பார்ப்பனர்களுக்கே 100 சதவீதம் இப்பதவி என்றிருந்த நிலைமாறி சாதி வேற்றுமை இல்லாமல் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனும் அரசின் ஆணையை அனைவரும் வரவேற்றுப் பாராட்டுகிறார்கள்.

## தில்லியில் தேவேந்திரர் இலவச மருத்துவ முகாம்

தில்லி தேவேந்திர குல வேளாளர் சங்கமும் கேப்டன் ஆயுஸ் புருஸார்த்தா பவுன்டேசனும் இணைந்து தில்லியில் 31.7.2005 அன்று ஒரு மருத்துவ முகாம் நடத்தினர். இது தில்லி சக்கூர்பூர் எப். பிளாக்கில் உள்ள தமிழ் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. பெருவாரியான மக்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் பலன் பெற்றனர். தேவேந்திர குல வேளாளர் சங்க நிர்வாகிகள், தலைவர் ஏ.வி. முனியப்ப தேவேந்திரர், துணைத் தலைவர் இராமசாமி தேவேந்திரர், பொதுச் செயலாளர் சாலை விஜயகுமார், துணைச் செயலாளர் கந்தசாமி தேவநேந்திரர், பொருளாளர் முருகேசன் தேவேந்திரர் மற்றும் உறுப்பினர்கள் இந்த முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர்.

❊ ❊ ❊

## கண்ணகி சிலை மீண்டும் நிறுவப்பட்டது

தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமாக, அடையாளமாக இருந்த கண்ணகி சிலையை முந்தைய அ.தி.மு.க. அரசு சென்னை மெரினா கடற்கரையிலிருந்து அகற்றியது. தி.மு.க. அரசு பதவி ஏற்றதும் மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலையை 4.6.2006 அன்று நிறுவியது பாராட்டத்தக்கது.

அதே போல் தமிழரின் வரலாறு மற்றும் பண்பாட்டு அடையாளப் பெயர்களான சேர, சோழ, பாண்டியர் பெயர்கள் மீண்டும் போக்குவரத்து கழகங்களுக்கு கருணாநிதி அரசு கொண்டு வர வேண்டும். தயக்கம் காட்டாமல் அரசு இதை உடனடியாகச் செய்ய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

Printed by Mrs. Thulasimani Mariappan and Published by Dr. Guruswami Siddhan on behalf of Devendra Kula Velalar Sangham and Printed at Maa Mannar Achakam, 10/2A, Nalvar Nagar, Coimbatore - 641 046 and published at 10/2, Nalvar Nagar, Coimbatore - 641 046. Editor : Dr. Guruswami Siddhan

செய்தித்தாளாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரதியார் பல்கலைக்கழக அஞ்சலகத்தில் ஒவ்வொரு மாதமும் 10 & 11 தேதிகளில் சேர்க்கப்படுகிறது.

அனுப்புநர் :

**பேராசிரியர் முனைவர் குருசாமி சித்தர்,**
**ஆசிரியர், மள்ளர் மலர், 10/2 நால்வர் நகர், பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல், கோயமுத்தூர் - 641 046.**

பெறுநர்:

உயர்திரு

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .